Koviloor Digital Library

4-5

உ

ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் வரலாறு

கோவிலூர் ஆதீனம்
4963
R65, (சங்)
கோவிலூர்-630 307

தொகுத்தவர் :
புதுக்கோட்டை பிரும்மஸ்ரீ மல்லூர் தெக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி

ACC. NO.
4963

வெளியிட்டவர் :

ஸ்ரீ ஆர். சுவாமிநாத ஐயர்

முன்[illegible]ானேஜர், இளையாத்தக்குடி தேவஸ்தானம்,

இராமநாதபுரம் ஜில்லா

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் வரலாறு

தொகுத்தவர் :
புதுக்கோட்டை பிரும்மஸ்ரீ மல்லாதி தெக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி

வெளியிட்டவர் :
ஸ்ரீ ஆர். சுவாமிநாத ஐயர்
மானேஜர், இளையாத்தக்குடி தேவஸ்தானம்,
இராமநாதபுரம் ஜில்லா

Koviloor Digital Library

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் சமஸ்தானம்

ஸ்ரீ
சந்திரமௌ
ளீச்வர

முகர்

இளையாத்தகுடி ஸ்ரீ நித்யகல்யாணி ஸமேத
கைலாஸநாதஸ்வாமி தேவஸ்தானம் மானேஜர்
ஆர். ஸ்வாமிநாதய்யர் அவர்களுக்கு:

நமது ஆசார்ய பீடத்தின் 65-வது ஆசாரியர்களாக விளங்கி அவ்விடம் இளையாத்தகுடி என்னும் சிரமாபனோதர க்ஷேத்திரத்தில் நிர்விகல்ப ஸமாதியில் இருந்து வரும், ஸ்ரீ மஹா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஜீவிய சரித்திரத்தைத் தமிழில் வெளியிட்டு, பீடத்தின் சிஷ்யகோடிகளுக்கு உபயோகமாகும்படி செய்த திவ்ய கைங்கரியத்தைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதைக் குறித்து ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். மேன்மேலும் தாங்கள் இவ்வித கைங்கரியங்களில் ஈடுபட்டு எல்லா சிரேயஸ்ஸையும் அடைய வேண்டுமாய் ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் ஆக்ஞையானபடி தெரிவிக்கலான காரியம்.

முகாம்:
சின்ன காஞ்சீபுரம்
24—10—1954

ஸி. எஸ். விச்வநாத ஐயர்
மானேஜர்

Koviloor Digital Library

உ

ஸ்ரீ சந்திர மௌளீசர் துணை

ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் வரலாறு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 65-வது ஆசாரியர்களாக விளங்கிய ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அதிஷ்டானம் இளையாத்தகுடி ஸ்ரீ கைலாஸநாத ஸ்வாமி நித்தியகல்யாணி அம்மன் தேவஸ்தானம் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. ஷ தேவஸ்தானத்தின் மானேஜர் ஸ்ரீ ஆர். சுவாமிநாத ஐயரின் முயற்சியால் இப்புத்தகம் புதுக்கோட்டை பிரம்மஸ்ரீ மல்லாதி தெக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் எழுதப்பெற்று, ஷ ஸ்வாமிகளின் 64-வது ஆராதனை (3—4—54)யின்போது சன்னிதானத்தில் வைத்து படிக்கப்பெற்றது.

இப்புத்தகத்தின் பிரதி வேண்டுவோர் கீழே கண்டவருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

★

வெளியிடுவோர்:

ஸ்ரீ ஆர். சுவாமிநாத ஐயர்

முன்னாள் மானேஜர், ஸ்ரீ கைலாஸநாத ஸ்வாமி
நித்தியகல்யாணி அம்மன் தேவஸ்தானம்
இளையாத்தகுடி போஸ்டு, இராமநாதபுரம் ஜில்லா.

Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய, ஸ்ரீ சந்திர சேகரேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள்
(68வது பீடாதிபதிகர்களாக தற்காலம் விளங்கிவரும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள்)

Koviloor Digital Library

உ

ஸ்ரீ சந்திர மௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
65-வது ஆசாரியர்களான
ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

௳

இராமனுதபுரம் ஜில்லா இளையாத்தக்குடியிலுள்ள
ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானம்

௳



இராமனுதபுரம் ஜில்லா கீழச்சேவர்ப்பட்டிக்கடுத்த இளையாத்தக்குடியில் அமர்ந்துள்ள ஸ்ரீ நித்யகல்யாணி அம்பாள் ஸமேத ஸ்ரீ கைலாஸநாத ஸ்வாமி ஆலயம்.

Koviloor Digital Library

श्रीचन्द्रमौळीश्वराय नमः

श्री काञ्चीकामकोटि पीठाधीशजगद्गुरु श्री महादेवेन्द्रसरस्वतीशङ्कराचार्यस्तुतिः

वीरासने समासीनं वटमूलनिवासिनम् ।
कराङ्कुचितचिन्मुद्रं दक्षिणामूर्तिमाश्रये ॥

ओंकारशब्दविदितः परमेश्वरो यः
यत्काममपीठममलं समलंचकार ।
तत्पीठदेशिकवरेष्ववतंसभूतं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ १ ॥

श्रीविद्यया प्रथितदेशिकसार्वभौमात्
श्रीचन्द्रशेखरमुनेरुपलब्धपीठम् ।
सत्यक्षमाशमदमादिगुणाभिरामं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ २ ॥

मध्यार्जुने निवसतो तृचिये विनीते
शेषाद्रिशास्त्रिसुमतेः सुभगं तनूजम् ।
आबाल्य एव हि गृहीतसमस्तविद्यं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ३ ॥

शीतांशुचूडचरणप्रवणान्तरङ्गः
वेत्ताखिलागमपुराणकदम्बकस्य ।
नेताऽद्वितीयसमितेः श्रितकोविदस्तं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ४ ॥

शंसन्ति यं बुधजनाः विदितागमान्ताः
मध्यार्जुनस्य महिताद्भुतलिङ्गमूर्तेः ।
आविर्बभूव चरमूर्तिमसुं विभाव्य
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ५ ॥

भस्मत्रिपुण्ड्रविलसद्रमणीयफालं
रुद्राक्षरत्नमणिभिर्विलसत्सुकण्ठम् ।
मन्दस्मितेन्दुवदनं सुमनोज्ञदेहं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ६ ॥

गम्भीरवाक्यमणिभिर्बहुयुक्तियुक्तैः
पाषण्डदर्पदमने निरतं मुनीन्द्रम् ।
आस्तिक्यधर्मपरिपालकमप्रमेयं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ७ ॥

सङ्गीतशास्त्रनिपुणं रसिकाग्रगण्यं
अद्वैतभाष्यकुशलेष्वमितादरं च ।
सन्मानवस्त्रवसुभिर्बुधरञ्जकोत्कं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ८ ॥

यः पञ्चषष्टिरमणीयसुहृद्यपद्यैः
श्रीकामकोटिगुरुवंशपरंपरायाः ।
स्तोत्रं चकार कृपया जगतां हिताय
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ९ ॥

आसेतुविन्ध्यधरणीमहिता नरेन्द्राः
यत्पादपद्ममनमन् विविधोपचारैः ।
धन्या ययुः सुकृतिनो कृतकृत्यतां तं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ १० ॥

कर्नाटकान्ध्रद्रविडोत्कलकेरलादि
नानाप्रदेशनिलया यमिह प्रणेमुः ।
एकात्मनाऽऽदिगुरुभावनया यतिं तं
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ ११ ॥

Koviloor Digital Library

अभ्यर्च्य पादकमलं कनकाभिषेकैः
संपूजयञ्च बहुधा नवसालराज्ये ।
श्रीरामचन्द्रनृपतिः गुरुचक्रवर्ति
वन्दे सुदर्शनमहाविबुधेन्द्रवर्यम् ॥ १२ ॥

सत्यात्मकाय समचित्तसमन्विताय
संसारतापशमनाय शुभंकराय ।
नारायणाश्रमवराय नतार्तिहाय
स्वामिन्नमोऽस्तु भवते गुरुशेखराय ॥ १३ ॥

प्राज्ञाय भेदरहिताय बुधार्चिताय
धीराय दीनभरणाय यमीश्वराय ।
श्रीकामकोटिनिलयाय सुदर्शनाय
स्वामिन्नमोऽस्तु भवते परमाद्वयाय ॥ १४ ॥

सत्वाकारं सदयहृदयं दर्शनीयस्वरूपं
विद्यालोलं विषयविमुखं वेदवेदान्तनिष्ठम् ।
पुण्यश्लोकं शशिधरपदाम्भोजयुग्मानुरक्तं
वन्दे मान्यं गुरुवरमहादेवनाम्ना प्रशस्तम् ॥ १५ ॥

काञ्चीक्षेत्रे विदितविभवे कामकोटिप्ररूढे
कामाक्षीसत्करुणपयसा वर्धिते कल्पवृक्षे ।
प्रागुद्भूताऽमृतफलमहो मूर्तवद्भासमानं
वन्दे मान्यं गुरुवरमहादेवनाम्ना प्रशस्तम् ॥ १६ ॥

सकलभुवनयोगक्षेमहेतुप्रधानैः
जपनियमतपोभिर्होमपूजादिभिश्च ।
विधविधनतिगानैः प्रीणयन् चन्द्रमौलिं
गुरुरिह जगतां श्रीकामकोट्यां विरेजे ॥ १७ ॥

Koviloor Digital Library

हृदि हृदि जनयन् वै वैदिकाचारसक्तिं
पथि पथि मनुजानां पातयन् द्वैतमोहम् ।
दिशि दिशि निगमान्तं बोधयन्नद्वितीयं
गुरुरिह जगतां श्री कामकोट्यां बभासे ॥ १८ ॥

हालास्यदिव्यनगरोत्तरपूर्वभागे
कैलासनाथनिकटे सुजनाभिभूते ।
क्षेत्रे श्रमापहरणे च सुदर्शनार्यैः
सद्दर्शनाद्वयपदं परमं प्रपेदे ॥ १९ ॥

श्रीमध्यार्जुनलोकविश्रुतमहालिङ्गान्तरङ्गोह्यसौ
मेधावी बहुशास्त्रवित् सुकृतधीः श्री कामकोटीमटे ।
चत्वारिंशतमेष लोकगुरुराट् स्थित्वा यशस्वी विभुः
सिद्धिं प्राप सुमीनदर्शदिवसे वर्षे विरोधौ महान् ॥ २० ॥

बाल्ये श्रुतं पितृमुखात् गुरुवैभवं यत्
आनीय तत्स्मृतिपथं पुनरेव भक्त्या ।
प्रोक्तं वसन्ततिलकादिमनोज्ञवृत्तैः
नन्दन्तु सर्वसुजनाः गुरुभक्तिभाजः ॥ २१ ॥

॥ ओम् तत्सत् ॥

इति मल्लादिदक्षिणामूर्तिविरचिता
श्रीमहादेवेन्द्र सरस्वतीशङ्कराचार्यस्तुतिः
संपूर्णा ॥

॥ श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ॥

Koviloor Digital Library

कीर्तनम्

मोहनरागे गीयते चाप् तालः

पल्लवी

गुरुवरमाश्रयत मनुजा सततम्

अनुपल्लवी

निरवधिकरुणारसभरभरितं
निखिलनिजाश्रितभयहरचरितम् गुरुवर

चरणम्

शुद्धज्ञानकन्दं लीलयापरिहृतयवबन्धं
श्रद्धयाहर्निशं बोधितभाष्यबृन्दं
कामकोटिपीठाधीशं गुणाकरं
कामवैरिशिवमानववपुर्धरं
नामरूपरहितब्रह्मध्यानपरं
श्रीमहादेवेन्द्र सरस्वती यतिवरं गुरुवरमाश्रयत

Koviloor Digital Library

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் ப்ரசிஷ்யரான மைசூர் மகாவித்வான் சதாசிவராவ் இயற்றிய கீர்த்தனை

பல்லவி

ஸ்ரீ ஷண்முக ஜனக சந்திரமௌளீஸ்வரார்த்த
நாரீஸ்வர சங்கர ம்ருகதரத்ரிபுரஹர தயாகர

அனுபல்லவி

பாஷண்ட மதகண்டன ஷண்மத ஸ்தாபன
ஸ்ரீமந் மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ பகவத் பாதாசார்ய பூஜிதபரத நந்தநந்தனஹித
நமாமி லோக காந்த பரமசாந்த

சி. ஸா.

ஸ்ரீ தஸகலமுனிநுதஸகுண கலிகலுஷஹரண
நிபுண ஸிரபதி பிதிக்குத நமிதசரணஸதய ஹ்ருதய
த்ரிநயன ககன வஸனத்ரிபுவன
ஸதவன கரத்ருத டமருக ஸுராரி
மதவிநாசகர த்ரிசூலதர

சரணம்

பஞ்சவதன பரமபாவன ஸநாதன
பார்வதீரமண உரகபூஷண நித்யகல்யாண

பஞ்சபாணஹர கங்காதர பயஹரஸதாசிவ
கவிநுத பரமமங்கலமூர்த்தே சுபகீர்த்தே

வ்ருஷவாக ரஜதகேஹ த்ரிபுவணமோஹண
மோஹஜிதாந்த காஸுர ஸுரேசவர

உஷாணக மானஸ மத்திரபிஞகதர
ஸதாசிவ சங்கட்ஹர ஜகதுத்தார

தாருகவன விஹரண ப்ஸ்மருத்ராஷதாரண
ஸதாசிவ கலுஷவாரண

க்ரூரதனுஜஹ்ரண காமாக்ஷீ குசம்ருகமத
பங்கில முத்ராங்கித ஹ்ருதயாபரணபரிபூர்ண.

Koviloor Digital Library

ஸ்ரீ மஹா தேவேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் பேரில் உள்ள தீக்ஷிதர் கிருதி

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

பல்லவி

சங்கராசார்யம் ஸ்ரீமச்சங்கரா சார்யம்
பக்தமனோ வசங்கராசார்யம் ஸ்மராம்யஹம்
பங்கஜாத பவவேத்யம் ஹிருதயம்
பங்கஜாத பவரோக வைத்யமாத்யம்
சங்கராசார்யம் ஸ்மராம்யஹம், ஸத்குணஸாந்த்ரம்
ஸ்ரீமகாதேவ ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ர சந்த்ரம்

—ஸ்ரீ சங்கரா

அனுபல்லவி

சங்கர பகவச்சரணுபர வர்யம்
சங்கரக்ருபையா வர்த்தித வீர்யம்
சங்கராங்கராகஸித யசோதுர்யமனிசம் கராப்ஜமவார்ய
தபச்சௌர்யம்.

—ஸ்ரீ சங்கரா

சரணம்

பரமஞான லதாலவாலம், பவ்யதர ஸுமனோஜாலம்,
பரமத கண்டன சண்டிமசீலம், பரமாத்வைத ஸ்தாபன
லீலம்,
கரகலித தண்ட கமண்டுலம் காஷாயதரம், விந்தமுனி
மண்டலம்,
வரமதி விஜித ஹரகுண்டலம், சுபவரதம் நததரா
கண்டலம்.

—ஸ்ரீ சங்கரா

Koviloor Digital Library

ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
பேரில் பாடப்பெற்ற மற்ருெரு கீர்த்தனம்

இராகம் : ஸ்ரீராகம் தாளம் : மிச்ர தாளம்

பல்லவி

சங்கராசார்ய – ஸத்குருவர்ய – சங்கராசார்ய

அனுபல்லவி

சம்கலய சிவராம யத்ய பயங்கராப்ஜசய – ஸ்வாமின்
சம்கலய சிவராம யத்ய பயங்கராப்ஜசய –
சங்கர க்ருபாலய – ஸத்குணலய —(சங்கரா)

சரணம்

1. பங்கஜாக்ஷரத – பகுவித – சிவங்கர சரித
பங்கஜா ஸனுதி மானித – பத்மபாத ப்ரமுகா பாவித
சங்கரோ பனிஷத் கணகீதா – ஸம்யமி
சங்கரோ பனிஷத் கணகீதா
சாஸ்த்ர ஸூத்ரார்த்தாத்யந்த நிரத —(சங்கரா)

2. சங்கரஸ்வரூப – ஸகலகலா ஸார்வ பௌமாதிப
ஸங்கலித பாஷ்யாமிருதோப ஸ்வாதபரவச ஸாதுபூப
சங்கராச்யுத ஸத்கதாலாப – ஸ்ரீமத்
சங்கராச்யுத ஸத்கதாலாப
ஷண்மதஸ்பான ஸத்ப்ரதாப —(சங்கரா)

3. ஸங்கவர்ஜிதேச – சந்திரமௌளீச – லிங்கபூஜாவேச
துங்கபத்ரர்தீரா – ரிச்யசிருங்க மௌனிஸ்தான வாஸ
மங்கள சாரதா பீடேச – ஸ்வாமின்
மங்கள சாரதா பீடேச
அமர வாதித்ரா ரவாத்யாச —(சங்கரா)

4. பூமி ஸௌரவ ரேந்திரா – பூதிதாராபி ராம – நதநரேந்திர
ஸ்ரீமத் சந்திரமௌனி இந்திரேந்திர நாமகீர்த்தன
ஸாரக்யேந்திர
காமகோடி பீடாதிபதீந்திரா – காஞ்சி
காமகோடி பீடாதிபதீந்திரா
ஸ்ரீ மஹாதேவ ஸரஸ்வதீந்திரா —(சங்கரா)

Koviloor Digital Library

உ

ஸ்ரீ சந்திர மௌளீசர் துணை

ஸ்ரீ மஹா தேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

" सदाशिव समारम्भां शङ्कराचार्यमध्यमाम् ।

अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरंपराम् ॥

" எல்லாம் வல்ல இறைவன் முழு முதற் கடவுள் சிவபெருமானை முதலாகவும் ஸ்ரீ சங்கர பகவத்பாதரை நடுநாயகமாகவும், இன்று நமது முன் பிரகாசிக்கா நின்ற குருமூர்த்தியை இறுதி யாகவுமுடைய நமது குரு பரம்பரையைப் போற்றி வணங்குகின்றேன்."

" இப்பூவுலகினில் எப்பொழுது தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்குமோ, நல்லோர்கள் துன்பத் துக்கு ஆளாவார்களோ, அப்பொழுதெல்லாம் நானே இம்மண்ணுலகில் மானிட வடிவம் தாங்கி துஷ்டர்களை ஒழித்து நல்லறத்தை நிலை நாட்டுவேன்" என்று கண்ணன் கீதையில் உறுதி கூறியிருக்கிறதை ஒத்து, கலியுகம் ஆரம்பித்து 2,500 ஆண்டுகள் ஆனதும், இப் பாரத நாட்டில், பல்வேறு போலிச் சமயங்கள் தோன் றியும், பல்வேறு நாட்டார்கள் படையெடுத்து மக்க ளுக்குச் சொல்லொணுத் துன்பத்தை விளைவித்தும், வர்ணுச்ரம தர்மங்கள் வேத நெறிகள் மங்கவும், பௌத்தம், சமணம், நாத்திகம் போன்ற லோகாயத மதங்கள் பரவிக்கொண்டும், பாரதநாடு தத்தளித்துக் கொண்டிருந்த தருணத்தில் கருணைக் கடல் சிவபிரான், சேரநாட்டில் காலடியில், சங்கரர் என்ற திருநாமம் பூண்டு, தன் தந்தை சிவகுரு என்ற அந்தணச் சீலருக் கோர் அரும் புதல்வனுகத் தோன்றி, சிறு பிராயத்தி லேயே தான் தெய்வத்தன்மை யுள்ளவரென்பதை பல லீலைகளால் உலகத்தாருக்கு தோற்றுவித்து, 8 ஆண்டில் ஸகல கலைகளையும் பயின்று, நர்மதை யாற்றங்கரையின்

Koviloor Digital Library

கண் யோக நிஷ்டையிலிருந்த ஸ்ரீ கோவிந்த பகவத் பாதரை தன் குருவாக வணங்கி, விதிப்படி ஸன்யாஸம், மஹா வாக்யோப தேசங்களைப் பெற்று அவரனுமதி யின் பேரில், காசி நகரம் சென்று 16-ம் ஆண்டிற்குள் பிரஸ்தானத்ரய பாஷ்யங்களையும் கணக்கற்ற நூல் களையும் இயற்றி, ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு தத்வோபதேசங்களைச் செய்து, ஸ்ரீ விசுவனுதப் பெரு மானையும் வியாச முனிவரையும் கண்டு, அவர்கள் அருளையும் பெற்று, மன்னர்களான ஸுதன்வா, ஹாலன் முதலியோர் சூழ இப்பாரத நாட்டை மூன்று தடவை திக் விஜயம் செய்து, ஆங்காங்குள்ள புலவர் களோடு வாதங்கள் புரிந்து 72 துர்மதங்களை ஒழித்து ஷண்மதங்களை நிலை நாட்டி, வைதிக நெறி வழக்கங் களை பரவச் செய்து போலிச் சமயங்களையும் நாத்திகத் தையும் நாட்டை விட்டு வெளியேறச் செய்தும், பிற் காலத்திலும், நமது பாரத நாட்டின் தனிப் பெருமை பொருந்திய அரும்பெரும் பண்பின் ஒளியாய் விளங்கும் அத்வைதத் தன்மையை மக்கள் பெற்று உயர்நிலையை அடையவேண்டி, தன் சிஷ்யர்களில் மிகவும் சிறந்த வர்களும் தெய்வத்தன்மையும் பெற்றவர்களுமான, விசுவரூபர், பத்ம பாதர், தோடகர், ஹஸ்தா மலகர் என்பாரை முறையே, சிருங்கேரி, துவாரகை, பத்ரி, பூரி என்ற இடங்களில் (ஆம்நாய பீடங்களாகிய மடங் களில்) ஆசாரியர்களாக நியமித்து, அப்பால் இப்பாரத தேவியின் உயிர்நிலை இடமாகவும், பேரின்ப வீட்டை யளிக்கும் காஞ்சிபுரத்தில், சோழ மன்னரான ராஜ ஸேனனைக் கொண்டு வரதராஜர், காமாக்ஷி ஏகாம்ப ரேசர்களுக்கு ஆலயங்களை நிர்மாணிக்கச் செய்து காமாக்ஷி அம்பிகையின் ஆலயத்தில் ஸ்ரீ காம கோடி சக்ரப்ரதிஷ்டாபனம் செய்து, ஸர்வக்ஞபீடமேறி, இந்திரன், ஸரஸ்வதியோரை ஜயித்து, உலகம் வணங் கும் தனிப் பெரும் குரு சக்ரவர்த்தியாக சில காலம் பிரகாசித்து, பிற்காலத்தில் தன்னுடைய ஆத்ம பூஜை யான யோக லிங்கத்தையும், ஸ்ரீ காம கோடியையும், ஸர்வக்ஞாத்மேந்த்ர ஸரஸ்வதி என்ற சிஷ்யரிடம் ஒப்புவித்து 32-ம் ஆண்டில் தன் அவதார காரியம் முடிந்து ஸ்ரீ காமாக்ஷியின் முன்பாக ராஜயோக மஹா ஸமாதியிலிருந்து மானிட வடிவம் நீங்கப் பெற்று அகண்டாகார பிரம்ம சைதன்யமாய் வியாபித்து,

Koviloor Digital Library

இன்றும், வணங்கும் ஆஸ்திகர்களுக்கு அனுக்ரஹம் செய்யும் வண்ணம் ஜ்வலித்துக் கொண்டிருப்பது சரித்ரமுணர்ந்த பெரியோர்கள் நன்கறிந்த விஷயங்களாகும். ஸ்ரீ சங்கரர் கலி 2625–க்கு ஸரியான ரக்தாக்ஷி வருஷம் வைகாசி மாதம் சுக்ல பக்ஷம் ஏகாதசி பகல் ஸித்தி பெற்றுர். அப்பால் ஸ்ரீ காமகோடி பீடத்தில் இன்றுவரை 68 ஆசாரியர்கள் பீடாதிபத்யம் பெற்று பரம்பரையாக நமது தர்மத்தை ரக்ஷித்து வந்திருக்கிறுர்கள். இந்த புண்ய மரபில் 65-வது பீடாதிபதிகளே இங்கு நாம் போற்றும் ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

லோக குருவாக ஸ்ரீ காமகோடி பீடத்திலிருந்து உலகத்திற்கும் மக்களுக்கும் அனுக்ரஹம் செய்யும் உத்தமர்களுக்கு மிகவும் இன்றியமையாததான நற்குணங்கள் பலவும், இவரிடம் சிறப்புடன் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. குறளாசிரியரும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" "ஒல்லும் வகையான் அறவினை யோவாதே–செல்லும் வாயெல்லாஞ் செயல்" என்று கூறியபடி மனோவாக்கு காயங்களால் செய்யும் யாவையும் அறத்தோடு கூடினுல்தான் நற்செயலும் நற்சொல்லு மென்பார்கள்.

நற்குல பிறப்பு, விளக்கமுடைமை, நிறை புலமை, அடக்கம், பொறுமை, பெருங்கொடை, அறவழி நிற்றல் முதலானவைகள் யாவும் இப்பெரியாரிடம் நன்கு விளங்கின. தன் ஒழுக்கத்தாலுலகத் திற்குவமையாகவும், பொருமை ஆசை கோபம் கடுஞ்சொல் முதலியன என்னவென்றுகூட அறியாதவராகவும், யோக நிஷ்டையிலிருந்து மக்களுக்கு அவரவர்கள் பக்குவத்துக்குத் தக்கபடி துன்பங்களைப் போக்கி இன்பங்களைப் பெருக்க உபாயங்களைக் காட்டிக்கொடுத்தவராதலால், இப்பெரியாரின் சரித்திரச் சுருக்கத்தை பெரியோர்கள் மூலம், கேட்டுத் தெரிந்தவரை இங்கு சுருக்கமாகக் கூறுவோம்.

இப்பெரியார் சங்கராசாரிய ஸ்வாமிகளாக பட்டம் பெறுவதற்குமுன், திருவிடைமருதூர் என்று பிரஸித்தி பெற்ற மத்யார்ஜுன க்ஷேத்ரத்தில் அவதரித்தவர். இவர்கள் பெற்றோர்கள் திருவிடைமருதூரிலேயே வசித்துவந்தார்கள். அக்காலத்தில் தஞ்சாவூரை

Koviloor Digital Library

ஆண்டு வந்த மகாராஷ்ட்ர மன்னர் சரபோஜியின் சிற்றப்பனுகிய அமரஸிம்மன் என்பார், மன்னருடன் அபிப்ராய வேறுபாட்டால் திருவிடைமருதூரில் தனக்கென ஓர் அரண்மனையைக் கட்டிக்கொண்டு வசித்து வந்தார். இந்த அமரஸிம்மன் மிகவும் தார்மிகர். பல கலைகளிலும் பயிற்சி பெற்றவர். இவரை அண்டி வெகுபேர் வாழ்ந்து வந்தார்கள். இந்த அரசனிடம் இந்தப் பெரியாரின் முன்னேர்கள் குரு ஸ்தானமாக இருந்தார்களென்று தெரிகிறது. இவர்கள் பிராம்மண வகுப்பில் கர்னுடக (கன்னடத்தை தாய் பாஷையாக வுள்ள) ஹோஸினி இனத்தைச் சேர்ந்தவர்கள். ஹரி தஸகோத்ரத்தில் தோன்றி ரிக்வேதத்தைக் கடைப் பிடித்து ஆச்வலாயன ஸூத்ரத்தைப் பின்பற்றும் மரபுடையவர்கள், ஆதியில் ஸ்வாமிகளுக்கு திருநாமம் மகாலிங்கம் என்பதாகும். இப்பெரியாருடைய வம்சத்தார் பலர் புகழ் பெற்ற மேதாவிகள், புலவர்கள், நூலாசிரியர்கள், நாட்டிற்கு பலவிதங்களிலும் அரிய பணிகளைச் செய்தவர்கள். அப்பெரியார்களில் சிலரை மட்டும் இங்கு உதாரண நிமித்தம் குறிக்கின்றேம். **ராஜா கோவிந்த தீக்ஷதர்** தஞ்சாவூரில் அரசாட்சி செய்த அச்சுதன், ரகுனுதன் என்ற நாயக்க மன்னர்களிடம் சுமார் 60 ஆண்டுகள் அமைச்சராயிருந்தார். சுயநல மற்றவர். பொதுஜன ஸேவைக்கு தன் ஆயுளை அர்ப்பித்தவர். ஒழுக்கத்தில் நிகரற்றவர். பல சாஸ்திரங்களிலும் வல்லவர்கள். தஞ்சாவூர் ராஜ்யத்தில், காவிரியினின்று பல சிற்ருறுகளையும் பெரும் வாய்க்கால்களையும் பிரித்து பாசனத்தைப் பெருக்கி பூமியின் வளத்தை உயர்த்தினர். புராதன ஆலயங்களைப் புதுப்பித்தார். ஆலயம் இல்லாத ஊர்களில் ஆலயங்களைக் கட்டினர். பல பாடசாலைகள் புஷ்ய மண்டபங்கள், சாவடிகள் நூதனமாக நிர்மாணம் செய்தார். இன்னமும், அய்யன் வாய்க்கால், அய்யன் பேட்டை, அய்யன் தெரு, அய்யன்குளம், அய்யன் கடைச் சந்து என்பவைகள் இவருடைய புகழை ஞாபகப்படுத்துகின்றன. பிரமாணமான நூல்களையும் இயற்றியிருக்கிறர். இவருடைய மைந்தர்களில் ஒருவர் **யக்ஞ நாராயண தீக்ஷதர்**. ரகுனுத நாயக மன்னரால் போற்றப்பட்டவர். ஸாகித்ய ரத்னுகரம் என்ற சரித்திர ஸம்மந்தமான காவியத்தை இயற்றினவர்.

Koviloor Digital Library

மற்றொரு புதல்வர் தான் வேங்கடமகி என்ற வேங்கடேசுவர தீக்ஷதர். சதுர்தண்டி பிரகாசிகை என்ற ஒப்புயர்வற்ற ஸங்கீத சாஸ்திரமும், வார்த்திகாபரணம் என்ற மீமாம்ஸா சாஸ்திரமும் இயற்றி நிகரற்ற கீர்த்தியோடு ப்ரகாசிக்கிறவர். இவருடைய மாணுக்கர்களே, நீல கண்ட தீக்ஷதர், ராஜ சூடாமணி தீக்ஷதர், சொக்கனு தமகி முதலிய மஹான்கள். கணக்கற்ற உயர்ந்த நூல் களை இயற்றியவர்கள். மேலும் இம்மரபில் வந்த வாஞ்சிகவி மகிஷ சதகம் என்ற நூலை இயற்றி புலவர் களுடைய மனதை வசீகரித்தவர். ஸமீப காலத்தி லிருந்த மகா மகோபாத்யாய பட்டம் பெற்றவரும், சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை தலைமை ஆசிரியரு மான ஸ்ரீ வெங்கட சுப்பா சாஸ்திரிகளும், ஸ்ரீ காமகோடி மடத்தின் நிர்வாஹத்தை சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வகித்து வந்த ஸ்ரீ கணபதி சாஸ்திரிகளும் இம் மரபைச் சேர்ந்தவர்களென்பதை யாவரும் நன்கறி வார்கள்.

இத்தகைய பெரியார்கள் வம்சத்தில் தோன்றிய வரே ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி. இவர் தந்தையார் சேஷாத்ரி சாஸ்திரிகள் என்பவர். ரிக் வேதத்திலும் ரிக் வேத ப்ரயோகங்களிலும் பிரஸித்தி பெற்றவர். ஸ்ரீ மஹாலிங்கப் பெருமானின் அருளால் தோன்றிய படியால், மைந்தனுக்கு ஸ்ரீ மஹாலிங்கம் என்ற பெய ரையே சூட்டினர்.

ஸ்ரீ மகாலிங்கம், குழந்தைப் பருவத்திலேயே, பிற்காலத்தில் மகாபுருஷனுக விளங்குவான் என்ப தற்கு அறிகுறியான பல அம்சங்களைப் பெற்றிருந்தார். சரீரகாந்தி, கம்பீரமான உடலமைப்பு, கண்களின் ஒளி, சுறுசுறுப்பு முதலியவைகளைப் பார்த்த ஊரார் இக் குழந்தையை இறைவன் அருள்தான் என்பதை நிச்சய மாக உணர்ந்தார்கள். குழந்தையும் நாளுக்கு நாள் மேன்மேலும் தேஜஸ்ஸுடன் வளர்ந்து வந்தது. இக் குடும்பத்தார் மிகவும் சிஷ்டர்களாகவும் வைதிக ஸம் பிரதாயங்களில் ஈடுபட்டவர்களுமாதலால், அந்தந்தக் காலங்களில் குழந்தைக்கு சாஸ்திரப்படியே அன்னப் ராசனம், சௌளம், வித்யாப்யாஸம் முதலிய ஸம்ஸ் காரங்களைச் செவ்வனே செய்தார்கள். 5 ஆண்டு முற்றுப்பெற்றது. உபநயனச் சடங்கையும் நன்கு

Koviloor Digital Library

நடத்தினர்கள். தன் தகப்பனாரிடமே பூர்ணமாக ரிக்வேதம் முழுவதையும் நியமமாக அத்யயனம் செய்தார். பிரயோகங்களையும் கற்றார். திருவிடைமருதூர் வாசிகளில் பல பெரியோர்கள், இந்த ஸ்வாமிகள் சிறு வயதில், பிரம்மசாரியாக நியமாத்யயனம், ஸமிதா தானம் பிக்ஷாசர்யம் செய்வதைப் புகழ்வார்கள். தன்னுடைய 17 வயதிற்குள்ளாக, பலர் போற்றும்படியான புல்மையுடன் விளங்கினர். இச் சிறுபிராயத்திலேயே இவருடைய புத்தி நுட்பத்தையும், படிப்பில் ஆர்வத்தையும், ஆசாரத்தையும் அக்காலத்தில் ஆசாரிய பீடத்தில் இருந்த 64வது ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கவனித்தார்கள். பெற்றோர்கள் அனுமதியின் பேரில் ஸ்ரீ மடத்திலேயே வித்வத் கோஷ்டியில் ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகளைச் சேர்த்தார்கள். கொஞ்ச காலத்திற்குள்ளாகவே பாஷியங்களையும் பயின்று நல்ல பாண்டித்யத்தையும் பெற்றுவிட்டார். ஸ்ரீ மடத்தில் பூஜைகள் விரதங்கள் ஹோமங்கள் முதலிய காரியங்களில் முன்னின்று திறமையாய் நடத்தும் யோக்கியதையைப் பெற்றிருந்தார்.

ஸ்வாமிகளின் குருநாதர்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 1814 ஹு முதல் 1851 ஹு வரை பீடத்தை வஹித்தார். இவர் காலத்தில்தான் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்மன் தாடங்க ப்ரதிஷ்டை விஷயமான வியவஹாரங்கள் நடந்தன. இந்த ஸ்வாமிகள் 1839ம் ஆண்டில் காஞ்சீபுரத்தில் காமாக்ஷி அம்மனுக்கும் 1846 ஹு திருவானைக்கா கோயிலில் அகிலாண்டேச்வரிக்கும் தாடங்க ப்ரதிஷ்டை செய்தார். திருவானைக்கா கோயில் தாடங்க ப்ரதிஷ்டை நடந்தபொழுது வைதிக ஸம்பந்தமான யாவற்றையும் முன்னின்று ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் நடத்தியது எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. மேலும் இந்த சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் காலத்தில் தான் 1821 ஹு தஞ்சாவூர் மகாராஷ்ட்ர மன்னர் ஸ்ரீ சரபோஜி மகாராஜா தற்போதுள்ள ஸ்ரீ மடத்தின் பூஜா கிரஹத்தை ஆலய வடிவமாகக் கட்டிக் கொடுத்தார். இந்த ஸ்வாமிகளின் பெருமையை வெகுவாக பல பெரியோர்கள் கூறியிருக்

Koviloor Digital Library

A963
R65(கோ)

கிறார்கள். இவர் மந்திர சாஸ்திரத்தில் மிகவும் நிபுணர். ஸ்ரீ வித்யா உபாஸகர். பராசக்தியை ஸாக்ஷாத்காரம் செய்தவர். தாடங்கப் ப்ரதிஷ்டை செய்வது, ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியாளுடைய ஸாக்ஷாத் அதிஷ்டானத்தைச் சேர்ந்தவர்களும், ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டாபகர்களுமான ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளே. மற்றய மடாதிபதிகளுக்கு இதில் ஸம்மந்தம் கிடையாது; என்ற தீர்மானம் (Vide Judgments in O. S. 95 of 1844 and Appeals S. P. 106 of 1848 & M. P. 398 of 1848) உலகெங்கும் பரவவே ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகளுடைய தர்சனத்திற்கு பல தேசங்களிலிருந்தும் வித்வான்கள் வந்தவண்ணமா யிருந்தனர். தஞ்சாவூர் மகாராஜா ஸ்ரீ சிவாஜி இவர்களுக்கு கனகாபிஷேகத்தையும் செய்தார். ஒரு ஸமயம் வடநாட்டு பண்டிதர்கள், சிலர் தக்ஷிணதேச யாத்ரையைச் செய்துகொண்டு கும்பகோணம் வந்து ஸ்ரீ ஸ்வாமிகளை தர்சனம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளும் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அவர்களுடைய அபேக்ஷை என்ன என்பதை வினவினார்கள். ஆனால் அப்பண்டிதர்கள் தாங்கள் ஸ்வாமிகளுடன் வித்வத் விஷயமாக வாதம் செய்ய வந்திருப்பதாக கூறினார்கள். ஸ்வாமிகளும் அப்படியே வாதிப்போம் என்று இயம்பி தங்களுடைய பூஜைகளையும் வழக்கம்போல் முடித்துக்கொண்டு ஸ்ரீ மடத்தின் கண்ணுள்ள பல வித்வான்களைக் கொண்டு ஓர் ஸபையைக் கூட்டினார்கள். பல பண்டிதர்களும் நகர ப்ரமுகர்கள் பலரும் கூடினார்கள். பிற்பகலில் வாதம் ஆரம்பமாயிற்று. வடநாட்டுப் பண்டிதர்கள் தங்களுடைய கக்ஷிகளை ஒவ்வொருவராக ஆரம்பித்தார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் அச்சபையின் கண் ஒரு ஆச்சரிய ஸம்பவம் நடந்தது. திடீரென்று அப்புலவர்களில் தலைவராகவுள்ளவர் எழுந்திருந்து ஸ்வாமிகளை வணங்கி "தங்கள் மடியில் ஓர் கன்னிகை மிகவும் ஜோதியுடனும் புன்னகையுடனும் உட்கார்ந்திருப்பவள் யார். அப்பெண் குழந்தையை விலக்குங்கள். அவள் முன் பேச எங்களுக்கு வாயெழவில்லை" என்றார். ஸ்வாமிகளோ "என் மடியில் தண்ட கமண்டலத்தைத் தவிர வேறொன்றையும் காணோமே. நீங்கள் ஏதாவது ஸ்வப்னம் கண்டீர்களா? நிம்மதியாக உங்கள் கக்ஷியைச் சொல்லுங்கள்" என்றார்கள். ஆனல்

Koviloor Digital Library

அப்பண்டிதர்கள் யாவரும் எழுந்திருந்து ஒன்றும் பேச முடியாதவர்களாய் லோகமாதாவான தேவியைத் துதித்துவிட்டு ஸ்வாமிகளை ஸாஷ்டாங்கமாக வணங்கி "லோக குருவே எங்கள் அறியாத்தனத்தை மன்னிக்க வேண்டுகிறோம். நாங்கள் முன் ஜன்மங்களில் செய்த நற்தவப்பயனே தங்களையும் தேவியையும் தர்சனம் கிடைக்கும்படியான பாக்யத்தைப் பெற்றோம். எங்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டு"மென்று பிரார்த்தித்தார்கள். அப்படியே அப்பண்டிதர்களுக்கு ஆசிகூறியனுப்பித்தார்கள். இப்படிக்கு ஸ்ரீ வித்யா உபாஸனா பலத்தால் எல்லாமுணர்ந்த முதிர்ந்த ஞானவைபவத்தோடு கூடியவர்களாதலால், ஸ்ரீ சந்திர மௌளீச்வரரின் அனுக்ரஹத்தினால், தமது பூத உடல் நழுவப்போகும் நாளை நன்குணர்ந்து பிற்காலத்தில் இப்பட்டத்திற்குரியவர் என்று ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகளைத் தீர்மானித்து பெற்றோர்களுடைய ஸம்மதத்தையும் பெற்று ஓர் நல்ல நாளில் ஸ்ரீ மகாலிங்கத்திற்கு ஸன்யாஸாச்ரமத்தையும் கொடுத்து ஸ்ரீ காமகோடி பீடஸ்ம்பிரதாயப்படி நான்கு மஹா வாக்யங்களையும் உபதேசித்தும் பூஜா ஸம்பிரதாயங்களையும் விரிவாக போதித்தும் ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி என்ற ஸன்யாஸ நாமாவையும் சூட்டியருளினார்கள். பின்னர் ஸ்ரீ மடத்தின் முக்யமான காரியஸ்தர்களிடம் மடத்து விஷயமான சில ஹிதோபதேசங்களையும் சொல்லி சற்று ஏகாந்த ஸ்திதியை அபேக்ஷித்தவர்களாக இருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் 37 வது காலம் பீடாதிபத்யம் பெற்று செவ்வனே நிர்வஹித்து ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் ஸ்ரீ யோகலிங்க பூஜையையும் ஷை மடத்தையும் ஒப்புவித்துவிட்டு 1851 க்கு ஸரியான ஸாதாரண ஆண்டு கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷம் திருதீயையன்று கும்பகோணம் ஸ்ரீ மடத்திலேயே நிர்விகல்ப ஸமாதியிலிருந்து பிரம்மபாவத்தைப் பெற்றார்கள். ஸ்ரீ மடத்திலேயே இவர்களுடைய அதிஷ்டானம் ஏற்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் காலத்தில் ஸர்வாதிகாரியான ஸ்ரீ கணபதி சாஸ்திரிகளின் பெரு முயற்சியால் ஸ்ரீ மடத்திற்கு பல நிலங்களையும் அணைக்குடி அருணாசலம் பிள்ளை மூலமாக வாங்கினார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

Koviloor Digital Library

ஸ்ரீ மஹா தேவேந்திர ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ மடத்தின் ஸம்பிரதாயப்படி மிகவும் விசேஷ வைபவங்களோடு ஆசார்யாபிஷேகங்கள் நடந்து கொண்டாடப்பட்டது. பல ஊர்களிலிருந்தும் பல அரசர்களிடமிருந்தும் பிரதிநிதிகள் கூடி ஷி ஸ்வாமிகள் ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கப் பார்த்து வணங்கி ஆனந்த பரவசமானார்கள். யௌவனமான வயது, உயர்ந்த கம்பீரமான தோற்றம், தபஸ்ஸாலும் ஸதாசாரத்தாலும் ஜ்வலிக்கும் தேககாந்தி, புன்னகையோடு நிறைந்த முகம், கல்வி கேள்விகளில் நிகரற்ற திறமை, எல்லாவற்றையும் விட மேலான குணங்களான அடக்கம், ஈகை, பேசும் திறமை நிறையப் பெற்றவர். இத்தகைய மேனியைப் பார்த்து யார்தான் வணங்காமலிருக்க முடியும். ஆரம்பத்தில் சில வருஷங்கள் ஸ்ரீ மடத்திலிருந்து கொண்டு பூஜைகளைச் செய்து கொண்டும் மடத்தின் விஷயங்களை விபரமாகவும் கவனித்தும் வந்தார்கள். அப்பால் பல சிஷ்ய வர்க்கங்கள் அடிக்கடி பிரார்த்தித்துக் கொண்டதின் பேரில் கும்பகோணத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலும், தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி, கோயம்புத்தூர், மலையாளம் முதலிய ஜில்லாக்களிலும் விஜய யாத்திரையாகப் புறப்பட்டு ஆங்காங்குள்ள ஸந்தர்ப்பங்களுக்குகந்தவாறு 2 நாள் 3 நாள் ஒரு வாரம் என்ற வீதம் தங்கி முக்கியமாகவுள்ள உடையார்பாளையம், திருவையாறு, திருச்சிராப்பள்ளி, திருவானைக்காவல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற ஊர்களில் அதிக காலம் விஜயம் செய்தும், ஆங்காங்குள்ள பக்த கோடிகளால் போற்றி வணங்கப் பட்டும், மக்களால் பாத பூஜைகள் பிக்ஷைகள் செய்யப்பட்டும், ஆங்காங்கு மகாஜனங்களுக்கு அவரவர்கள் ஸம்ஸ்காரங்களுக்கு தக்கபடி ஹிதோபதேசங்களையும் செய்தும், எங்கும் ஏழைகளிடத்தில் இரக்கம் மேலிட்டு அன்ன வஸ்திரங்களை ஏராளமாகக் கொடுத்துக் கொண்டும், வைதிகாசாரங்களை விருத்தி செய்து கொண்டும் மஹாமகத்தை முன்னிட்டு கும்பகோணத்திற்குத் திரும்பி விஜயமானார்கள். ஸ்வாமிகள் கும்பகோணத்திற்குத் திரும்பிய ஸமாசாரத்தைக் கேட்ட ஆயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாக ப்ரதிதினமும் வந்து தரிசித்து ப்ரஸாதங்களைப் பெற்றார்கள். எல்லாருடனும் ஸஹஜமாகப் பேசி அவரவர்

Koviloor Digital Library

களுக்கு ஆறுதலைச் சொல்லித் துன்பத்தைப் போக்கும் ஸ்வபாவத்தை யுடையவர். இவர்கள் காலத்தில் ஸ்ரீ மடத்தின் கீர்த்தி நாலா பக்கங்களிலும் பரவிற்று. ஒவ்வொரு நாளும் ஸ்ரீ மடத்தில் திருவிழாவைப் போல் மக்கள் பல ஜாதியினரும் கூடிக்கொண்டிருப்பார்கள். வழக்கமாக நடக்கும் ஸ்ரீ சந்திர மௌளீச்வர பூஜையைத் தவிர ஒவ்வொரு விசேஷ காலங்களிலும், வேத பாராயணங்கள், ஹோமங்கள், அதிருத்ர மகாருத்ரங்கள், ஸம்ஹிதா ஹோமங்கள் மறை விதிகளின்படி மிகவும் விமரிசையாக நடந்தன. மேலும், இவர்களுடைய காலத்தில் இத் தென்னாட்டில் எங்கும் பிரக்யாதி பெற்ற சாஸ்த்ர ஸிம்மங்களான மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள், திருவையாறு பாலகிருஷ்ண சாஸ்திரிகள், சிதம்பரம் ஹரிஹர சாஸ்திரிகள், மீமாம்ஸம் குப்பு ஸ்வாமி சாஸ்திரிகள், முதலிய பல மேதாவிகள் ஸ்ரீ மடத்தில் நடக்கும் ஸபைகளில் முன்னின்று வேதாந்த தத்வங்களையும் தர்ம சாஸ்த்ர ரஹஸ்யங்களையும் புங்காநுபுங்கமாக மழையாகக் கொட்டி எங்கும் ஆஸ்திகத்தை பரவச் செய்தார்கள். இன்னமும், சாஸ்த்ரீய ஸங்கீத வித்வான்களும், ஸ்ரீ ஸ்வாமிகளுடைய நிகரற்ற ஸங்கீத மேதையை அநுபவித்தவர்களாய், தங்களுடைய உயர்ந்த காலக்ஷேபங்களைச் செய்திருக்கிறார்கள். ஒரு நாள் ஸ்ரீ மடத்தில் ஸாயங்காலம் பூஜையின் மத்தியில் தஞ்ஞாயிறு ஸோமு பாகவதர் அபரிமிதமாகப் பல்லவி பாடி மனோதர்மம் செய்து ஸ்வரம் பாடிய அழகை மிகவும் மகிழ்ந்து வெகுவாக ஸன்மானங்களைச் செய்தார்கள் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இத்தகைய ஸந்தர்ப்பங்களில் ஜ்யோதிர் சாஸ்திர விஷயமாக 1878 ம் ஆண்டு வாக்கில் கணண ரீதியைப் பற்றி ஓர் சர்ச்சை நடந்தது. ஒரு கக்ஷியார், வெங்கடேச்வர தீக்ஷிதர், சுந்தரேச ச்ரௌதிகள் முதலியோர் தித்யாதிகளுக்கு பமத்யத்திலிருக்கிற பூமத்ய த்ருக் ஸித்தமும், கிரஹணாதிகளுக்கு பூபிருஷ்ட திருக் ஸித்தமும்தான் கிரஹிக்கத் தக்கவை என்றார்கள். மற்றோர் கக்ஷியின் தலைவர் திருநெல்வேலி கிருஷ்ண ஜோசியர், பூமத்யம். பமத்யம் வெவ்வேறானதென்றும், தித்யாதிகளுக்கு பமத்யம், திருக் துல்யதை யென்றும் பிரத்யக்ஷம் கூடாதென்றும் வாதித்தார்கள். இவைகளை நிர்ணயிக்க, அக்காலத்தில் கணித மேதையான

Koviloor Digital Library

(Euclid) Diwan Bahadur R. V. ஸ்ரீனிவாஸய்யர் C.I.E., Inspector General of Registration அவர்கள், அப்பு சாஸ்திரிகள். அப்பா தீக்ஷிதர்—மத்யஸதர்களாக நியமிக்கப்பட்டு ஷை மத்யஸ்தர்கள் ஸுந்தரேச ச்ரௌதிகளுடைய கணண, முறையே சுத்தமென்றும், அதையே கிரஹிக்க வேண்டு மென்று தீர்மானித்தார்கள். ஸ்ரீ மதாசாரியாரும் இத் தீர்மானத்தை ஆதரித்து, அதற்கத்தாட்சியாக யோக்யதா பத்திரத்தை 1877 ஈசுவர ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் தேதி வியாழக்கிழமை ஸ்ரீமுகம் கொடுத்து அனுக்ரஹித்தும் அந்தப்படியே இந்த 77 வருடங்களாக திருக்கணிதத்தை நமது தென்னாட்டார்கள் அனுஸரித்து வருகிறார்கள் என்பதை கும்பகோணத்து ஸ்ரீ மடத்துப் பஞ்சாங்கத்தின் முன்னுள்ள ஸ்ரீமுக மூலம் யாவரும் நன்குணர்ந்த விஷயமே. அந்தப் பஞ்சாங்கத்தில் காணும் ஸ்வாமிகளைப் பற்றிய சுலோகமொன்றை கீழே காட்டியுள்ளேன்.

यः काञ्चीपीठनाथश्शमितरिपुगणः कुंभकोणे चकास्ति
प्रत्यक्षप्राप्तवादिद्विपगणहनने केसरी चोळदेशे ।
शान्तेर्दान्तेश्च सीमा निरवधिमहिमा श्रीमहादेवनामा
काले कर्माण्यजस्रं व्यरचयदमले स्पष्टतिथ्यादिकाले ॥

இப்படி சில ஆண்டுகள் கழிந்தன. ஸ்ரீ லோக குருஆஸேது ஹிமாசலம் வரை திக்விஜயம் செய்து மக்களைக் கடாக்ஷிக்க வேண்டுமென்று பல ராஜாக்கள், ஜமீன்தார்கள், பல பிரமுகர்களிடமிருந்து யாதாஸ்துகளும் கோரிக்கைகளும் ஸ்ரீ மடத்தில் வந்து குவிந்தன. ஸ்ரீ பீடாதிபதிகளில் ஏதோ ஒரு சிலரைத் தவிர, பாக்கி அனைவரும் கன்யாகுமரியிலிருந்து இமயம் வரை விஜய யாத்திரை செய்து மக்களை அனுக்ரஹித்து வந்திருக்கிறார்கள் என்பது பல ஆசாரியர்களுடைய பூர்வ விருத்தாந்தங்களிலிருந்து விகசிதமாக விளங்கும். குரு பரம்பரா ஸ்தோத்ரத்திலும் பின் வருமாறு சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

चोळकेरळचेरौड्रपाण्ड्यकर्णाटकोंकणान् ।
महाराष्ट्रान्ध्रसौराष्ट्र मगधाधीश्च भूभुजः ।
शिष्यानासेतुहेमाद्रि शासते पुण्यकर्मणे ॥

ஸ்ரீ சங்கர விஜயம், சங்கரேந்திர விலாஸம், ஸித்த விஜய மகா காவ்யம், சங்கராப்யுதயம் குருஸந்தான தீபிகை முதலான அந்தந்த காலத்திய நூல்களிலிருந்தும், இவ்விஷயங்களை அறியலாம். ஆனால், 17-வது நூற்றாண்டின் மத்தியிலிருந்து 18-வது நூற்றாண்டு மத்திவரை இந்த யாத்ரை தடங்கல் பட்டிருக்கிறது. நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் கர்னாடக யுத்தப் போர்களும், பாளையப்பட்டு கலவரங்களும் நடைபெற்று அதிலும் காஞ்சீபுரத்தைச்சுற்றி சோழ மண்டலமெங்கும் மிகவும் மும்முரமாக நடந்து மக்கள் பட்ட துயரங்களுக்களவில்லை. இந்த இன்னல்களை முன்னிட்டு பீடாதிபதிகள் யாத்ரை செய்ய ஹேது வில்லை. ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பீடாரோஹணம் செய்த பிறகு, நாட்டில் ஓர் அளவு அமைதி ஏற்பட்டு நல்வாழ்வும் மக்கள் நடத்தி வந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளும் அகில பாரத தேச யாத்ரையை ஸங்கல்பித்தார்கள். விஜய யாத்ரை புறப்படுவதென்றால் ஒரு சிறிய நகரம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகருவது போலே யாகுமென்பதை யாவரும் நன்கறிவார்கள். ஸ்ரீ மடத்தைச் சேர்ந்த ஸகல பரிவாரங்களான, யானை, குதிரைகள், பசுக்கள் ஒட்டகை, வண்டிகள், பல்லக்கு, ஸிப்பத்தி வர்க்கங்கள் ஸகிதம் ஸ்ரீ ஸ்வாமிகள் முதலில் உத்திர திக்கை நோக்கி புறப்பட்டார்கள். மாயவரம், வைத்தீச்வரன் கோயில், சிதம்பரம், விழுப்புறம் முதலான நகரங்கள் சென்றும், ஆங்காங்கு ஆஸ்திக மக்களால் பல வகைகளில், பாத பூஜை பிக்ஷைகள் நடத்தப்பட்டு சில சில நாட்கள் இருந்து யாவருக்கும் நல்லாசி கூறி காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார்கள். இங்கு சில நாட்களிருந்து சென்னைக்குச் சென்று திருவொற்றியூருக்கு விஜயம் செய்த பிறகு ஆந்திர தேசத்தில் யாத்ரையை ஆரம்பித்தார். மகா ஜனங்கள் பக்தி பரவசத்துடன் ஒவ்வொரு இடத்திலும் வரவேற்று உபசரிப்பதைப் பார்த்து வியந்தும் ஸாவகாசமாகவே யாத்திரை நடந்தது. சில ஸமயம்

Koviloor Digital Library

பல்லக்கில் போவார்கள். சில ஸமயம் நடந்தே செல்வார்கள், ஆங்காங்குள்ள புண்ய தீர்த்தங்களையும் க்ஷேத்ரங்களையும் யதோக்தமாக தர்சனம் செய்து கொண்டு, பூரி ஜகன்னாத க்ஷேத்ரம் விஜயம் செய்தார்கள். ஆம்னாய பீடங்களில் இது ஒன்று. ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் கிழக்கு ஸமுத்திரக் கரையில், கோவர்த்தன மடத்தை ஸ்தாபித்து விமலா பீடத்தை ப்ரதிஷ்டை செய்து தன் சிஷ்யர்களில் குருபக்தியில் உவமையில்லாத தோடகரை நியமித்து அன்று முதல் இந்த பரம்பரை பிரகாசித்து வருகிறது. ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் விஜயத்தை முன்னிட்டு அந்நாட்டின் கண்ணுள்ள பிரமுகர்களனைவரும், ஒருமனதுடன் ஸ்வாமிகளை வரவேற்றார்கள். இவ்வைபவத்தில் பூரியிலுள்ள மற்ற மடாதிபதிகளும், மஹந்துகளும், கலந்து கொண்டனர். கணக்கற்ற பூஜைகள் பிக்ஷைகள் விமரிசையாக நடந்தன. ஸ்ரீ கோவர்த்தன பீடாதிபதிகளும் தங்களுடைய மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளை வரவேற்று ஆராதித்தார்கள். பல கிராமங்களைச் சேர்ந்த பாரம்பரியமாக ச்ரோத்ரிய இனும்தார்களான பல பிராம்மணோத்தமர்களும் பக்தி சிரத்தையுடன் பிக்ஷா பூஜாதிகளை நடத்தி காணிக்கைகளையும் ஸமர்ப்பித்தார்கள். மகோததியில் ஸ்னாநங்களைச் செய்தும் ஜகன்னாத ஆலயத்தின் கண் பகவானை தர்சனம் செய்தும், அங்குள்ள வித்வான்கள், வைதிகர்கள், மற்றும் பலதரப்பட்ட ஜனங்களுக்கும், அவரவர்களுக்கேற்றபடி வெகுமதிகளையும் வழங்கி, ஏழைகளுக்கு அன்னதானத்தையும் வஸ்திர தானத்தையும் நிறையச் செய்து யாவராலும் வணங்கிப் போற்றப்பட்டவர்களாய், விஜயநகரத்தை நோக்கி புறப்பட்டார்கள். ஏனெனில் விஜய நகர ஸாம்ராஜ்ய சின்னமாக ஸ்ரீ ஆநந்த கஜபதி மகாராஜா CIE அவர்கள் விளங்கி வந்தார். பல கலைகளிலும் பயிற்சிபெற்று உயர் பண்பு நிறைந்த உத்தமர். பலவகை அறங்களிலும் தன் பொருளைச் செலவு செய்து கியாதியுள்ள பெருந் தன்மையோடும் மகாஜனங்களுக்கு தந்தை போலிருந்தவர். ஏற்கனவே ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளை வணங்கி, ஆந்திர சக்ரவர்த்திகளான, நரசிம்மராயர், கிருஷ்ணதேவராயர் முதலானோர்கள், போற்றி பல கிராமங்களையும் வழங்கியிருக்கிறதை நன்குணர்ந்தவரானபடியால், ஸ்ரீ மகா

Koviloor Digital Library

தேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளை தன் முன்னோரைப் போல் போற்றவேண்டும் என்ற அவா மேலிட்டு விஜயம் செய்து அருள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மகாராஜாவின் மனோரதத்தை நிறைவேற்ற வேண்டியே 3—7—1885 ஸ்ரீ ஸ்வாமிகள் விஜய நகரத்திற்கு விஜயம் செய்தார்கள். நகர எல்லையிலேயே, யானை குதிரைகள், ராஜ பரிவாரங்கள் புடைசூழ பலவகை வாத்யங்கள் முழங்க பூர்ண கும்பங்களுடன் வேத வித்துகள் வேத கோஷங்களைச் செய்ய, ஆநந்த கஜபதி மகாராஜா, ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, நல்வரவு கூறி, யானையின் பேரில் தங்க அம்பாரியில் ஸ்வாமிகளை வீற்றிருக்கச் செய்து சவுரி சாமரங்களை வீசவும், வெண்குடை பிடிக்கவும், நகரத்தின் முக்யமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும் வீதிகளின் வழியாக ஊர்வலமாக அழைத்துவந்து ஓர் அழகிய விஸ்தாரமான அரண்மனையில் எழுந்தருளச் செய்தார். ஸ்வாமிகளின் பூஜாதிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தும் ஸகல ஸாமக்ரியையைகளையும் ஈன்றூர். ஸ்வாமிகள் திருமேனியையும், கம்பீரமான தோற்றத்தையும் பேசும் வன்மையையும், அபரிமிதமான மேதை அகண்டமான பாண்டித்யத்தையும் பார்த்த ஆந்திர தேசத்து மகாஜனங்கள் நிதம் ஆயிரக் கணக்காக வந்து தர்சித்து இத்தகைய மகா புருஷரைப் பார்க்க என்ன தவம் செய்தோமோ என்று பெருமகிழ்ச்சியுடன் போற்றினார்கள். ஸ்ரீ ஆநந்த கஜபதி அவர்களின் வேண்டுகோளின்படி விஜய நகரத்திலேயே சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை 23—7—1885 முதல் ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு நாளும் வித்வான்கள் கூடி அநேக தர்ம சாஸ்த்ர விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்தார்கள். பிரசித்த ஆந்திர தேசத்து ஸங்கீத வித்வான்கள் ஸங்கீத காலக்ஷேபங்களையும் நடத்தினார்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானமும், வேதாந்தோபன்யாஸங்களும், வேத பாராயண பூஜா ஹோமாதிகளும் நடத்தியது ஆந்திர தேசம் முழுவதிலும் பரவி ஸ்ரீ ஸ்வாமிகளை, சங்கரர் மறுபடியும் இந்த உருவத்துடன் வந்திருக்கிறார்களோவென்று பல வித்வான்கள் பக்தி மேலீட்டால் துதிகளையும் கிருதிகளையும் செய்து பாடினார்கள். இந்த ஆந்திர தேசத்து யாத்ரையைப் பற்றிய

Koviloor Digital Library

விபரங்கள் முழுவதும் அக்காலத்திலேயே அச்சிடப்பட்டு எங்கும் புஸ்தகங்கள் வழங்கப்பட்டன. இப்படி 24—9—1885 சாதுர் மாஸ்யவ்ரதம் முடிவு பெற்றது. விஜய நகரம் மகாராஜா அவர்கள் தன் குடும்ப ஸகிதம் ஸ்ரீலோககுரு திருவடிகளில் ஸாஷ்டாங்கமாய் வணங்கி ஸ்ரீ சந்திர மௌலீச்வரருக்கு கணக்கற்ற ஆடை ஆபரணங்களையும் காணிக்கைகளையும் ஸமர்ப்பித்து ஸ்ரீ ஸ்வாமிகளின் நல்லாசிகளையும் பெற்றவராய், விசுவரூப யாத்திரையையும் ஏற்பாடு செய்தார். ஸ்ரீ ஸ்வாமிகளும் ஆந்திர தேசத்து பண்டிதாள் ஸங்கீத வித்வான்கள் முதலானோர்களுக்கு தக்க வெகுமதிகளையும், சால்வைகள் பட்டு பீதாம்பரங்களையும் கொடுத்து ப்ரஸாதங்களையும் வழங்கி விஜய நகரத்தைவிட்டு புறப்பட்டார்கள். ஆந்திர தேசத்தில் உள்ள ப்ரபலமான ஜமீன்தார்கள் ராஜாக்கள் பலரும் தங்கள் தங்கள் ஊர்களில் விஜயம் செய்து அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, தூனி, பார்லிகிமேடி, பித்தாபுரம், பொப்பிலி, வெங்கடகிரி முதலிய சில நகரங்களுக்கு விஜயம் செய்தார்கள். ஒவ்வொருவரும் செய்த பூஜைகளையும் உபசாரங்களையும் வர்ணிக்க இயலாத விஷயமாகும். எங்கு பார்த்தாலும், ஸ்வாமிகளைப் போற்றுவதும், ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதும், வேத பாடசாலைகளை ஏற்படுத்துவதுமாக ஆந்திர தேச மக்கள் வ்ரதம் பூண்டனர். மார்க்கத்தில் ஆங்காங்குள்ள ஸப்த கோதாவரி கிருஷ்ணா முதலிய புண்ய நதிகளில் விதிப்படி ஸ்நானங்களை முடித்துக்கொண்டு ஹரிஹர க்ஷேத்ரங்களை தரிசித்துக்கொண்டும் ஆங்காங்கு ஏழைகளுக்கு தானங்களை வழங்கிக்கொண்டும், தக்ஷிண தேசத்தை உத்தேசித்துப் புறப்பட்டார்கள். ஆனால் காளஹஸ்தி மகாராஜா அவர்கள் காளஹஸ்திக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார். சிவக்ஷேத்ரங்களில் ஸ்ரீ காளஹஸ்தி மிகவும் பிரஸித்தி உள்ளது. பஞ்சபூத லிங்கங்களில் வாயு லிங்கத்தை உடைய இத்தலத்தில் இறைவனை வழிபட்டு கண்ணப்ப நாயனார் முக்தி பெற்றிருக்கிறார். ஆதி சங்கரகுருவும் " பக்தி: கிம் நகரோதி வனசரோபி பக்தாவதம் ஸாயதே " என்று கூறியிருக்கிறார். இத்தலத்தை சிவானுபவம் நிறைந்த பெரியோர் சேக்கிழாரும் பெரிய புராணத்தில்

Koviloor Digital Library

"மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்காளத்திக் கண்ணப்பர் திருநாடென்பர்
நாவலர் புகழ்ந்து போற்றும் நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவிசோலை சூழ்ந்த பொத்தப்பிநாடு"

என்று வர்ணித்தார். ஸ்ரீ லோக குரு முறைப்படி ஸுவர்ணமுகியில் ஸ்நானங்களை முடித்துக் கொண்டு கிரிப்ரதக்ஷிணம் வலம் வந்து ஸ்ரீ ஞான ப்ரஸூனும்பிகை காளஹஸ்தீச்வரரை தர்சனம் செய்து சில தினங்கள் தங்கினார்கள். காளஹஸ்தி மஹாராஜாவும் மிகவும் பணிவுடன் வணங்கி பாத பூஜை பிக்ஷைகளையும் நடத்தி காணிக்கைகளையும் ஸமர்ப்பித்தார். இங்கும் பண்டிதர்களைக் கொண்டாடி மகாராஜாவுக்கு ஆசி கூறி ஏழைகளுக்கு பலவிதமான தானங்களைச் செய்து சென்னை வந்து திருவொற்றியூர் விஜயம் செய்தார்கள். தியாகேசனாலயத்தின்கண் ஆதி பரமகுரு ஸ்ரீ சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சக்ரத்தைப் பூஜித்தும் ஆலயத்தின் பிராகாரத்திலுள்ள ஸ்ரீ பகவத் பாத மூர்த்திக்கும் அபிஷேக பூஜைகளை நடத்தியும் இந்த க்ஷேத்திரத்தில் வெகு புராதனமானதும் மிகவும் அபூர்வமாகவும் அமையப் பெற்று ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கும் விசேஷ பூஜைகளைச் செய்தும் இங்கு ஏற்கனவே ஸித்தி பெற்று இருக்கும் பல ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் அதிஷ்டானங்களிலும் பூஜைகளை நடத்தி, சென்னையில் பல ஆஸ்திக சிரோமணிகளால் பூஜிக்கப்பட்டு காஞ்சீபுரம் விஜயம் செய்தார்கள். சில நாட்கள் காஞ்சியில் தங்கி ஸ்ரீ காமாக்ஷி ஏகாம்ரேசர் வரதராஜ மூர்த்திகளை தர்சித்து விட்டு காஞ்சியை விட்டுப் புறப்பட்டு பல கிராமங்கள் நகரங்களில் இரண்டொரு நாட்கள்விஜயம் செய்து மகா ஜனங்களுக்கு ஆசீர்வாதங்களைச் செய்து திருப்பாதிரிப்புலியூர் வழியாக யாத்ரை செய்து கொண்டு ஸ்ரீ பரம சிவேந்திராசார்யாள் ஸித்திபெற்ற திருவெண்காடு சென்று தரிசித்து விட்டு மாயூரம் திருவாரூர் முதலான க்ஷேத்ரங்கள் வழியாக, மிகவும் குதூஹலமாக பாமரர் பண்டிதர், ஏழை ப்ரபு முதலிய யாவரும், சிவபெருமானே என்று போற்றி வணங்கியும் மறுபடியும் கும்பகோணத்திற்கு மகாமக ஸ்நானத்தை முன்னிட்டு விஜயம் செய்தார்கள். பல வருடங்கள் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பார்க்காமல் இருந்தபடியால் மக்கள்

Koviloor Digital Library

ஸ்ரீ மடத்திற்கு கூட்டம் கூட்டமாக வந்து தரிசித்து வணங்கி பரமானந்தமடைந்தார்கள். சில நாட்கள் ஸ்ரீ மடத்தில் தங்கியிருந்து அப்பால் ராமேச்வர யாத்ரையை உத்தேசித்துப் புறப்பட்டு உடையார்பாளையம் அங்கிருந்து மேற்கே பல ஊர்களுக்கு விஜயம் செய்து, பாலக்காடு, கொல்லங்கோடு கொச்சி முதலிய இடங்களில் அந்தந்த ராஜாக்களாலும், ப்ரபுக்களாலும் போற்றப்பட்டு, திரும்பி திருச்சினப்பள்ளிக்கும் அங்கிருந்து திருவானைக்காவுக்கும் விஜயம் செய்து ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளுக்குச் சொந்தமான ஸ்ரீ மடத்தில் எழுந்தருளினார்கள். ஜம்புகேச்வர க்ஷேத்ரம் மிகவும் ப்ரஸித்தம் இங்கு ஜலலிங்கம். யானைக்கும் சிலந்திக்கும் இறைவனருளிய புண்யம் நிறைந்து உலக மாதா அகிலேண்டேச்வரி என்று விளங்குகிறாள். இங்குதான் ஆதிகுரு தாடங்க ப்ரதிஷ்டை செய்தார்கள். சில நாட்கள் ஸ்வாமிகள் இந்த க்ஷேத்ரத்தில் தங்கி, ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களுக்கு அனுக்ரஹங்களைச் செய்தார்கள். இப்பிராந்தியத்தில் உள்ளவர்கள், ஏற்கனவே 1846-ம் ஆண்டில் தாடங்க ப்ரதிஷ்டை நடந்த பொழுது, ஸ்வாமிகள் பிரம்மச்சரியத்துடன், அபார வைதுஷ்யத்துடன் முன்னணியில் நின்று ஹோமாதி வைதிக ஸம்ஸ்காரங்களை நடத்தியதை நேரில் பார்த்தனுபவித்தவர்களாதலால், விசேஷ பக்தியுடன் பூஜாதிகளை நடத்திப் போற்றினார்கள். பிரதிதினம் கணக்கற்ற மக்கள் வந்து வணங்கினார்கள். திருவானைக்காவில் உள்ள மடத்தில் வேத பாடசாலையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இங்குதான் ஒரு நாள் காலை ஸ்ரீ ஸ்வாமிகள் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேதாந்த பாஷிய பாடங்களை ஆரம்பித்தார். அப்பொழுது திருச்சிக்கோட்டையிலிருந்து ஒரு ப்ராம்மணோத்தமர், 7 வயதுடைய தன்னுடைய குமாரனையும் அழைத்துக் கொண்டு திருவானைக்காவில் வந்து ஸ்ரீ மடத்தில் ஸ்வாமிகள் முன் நமஸ்கரித்து பையனையும் நமஸ்காரம் செய்யச் சொல்லி நின்றார். ஸ்ரீ லோககுருவும் அன்பான முறையில் அவரைப் பார்த்து என்ன விசேஷம்? என்ன அபேக்ஷை? எங்கிருந்து வருகிறீர்கள் என்று கருணையுடன் கேட்டார்கள். அதற்கு அந்த பிராமணர் நான் மிகவும் ஸாமான்யமாயுள்ளவன். இந்தப் பையன் என் குமாரன். இவனுக்கு

Koviloor Digital Library

சாஸ்திரப்படி உபநயனத்தை நடத்தி வைத்து அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்து மறுபடி நமஸ்கரித்தார். பிராம்மணர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீ மதாசாரியரும் மிகவும் அன்போடு "அப்படியே நடத்தலாம். கவலைப்பட வேண்டாம். நாளை நல்ல நாளாக விருப்பதால் குமாரனை அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேருங்கள்" என்று கூறியனுப்பி விட்டு ஸ்ரீ மடத்தில் உள்ள காரியஸ்தர்களுக்கு உபநயனத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளைத் தயார் செய்யும்படிக்கும் ஸ்ரீ மடத்தில் உள்ள வைதிகர்களையும் காலையில் தயாராக உபநயனத்தை ஆரம்பிக்கும்படி ஆக்ஞாபித்தார்கள். மறுநாள் காலை குழந்தையையழைத்துக் கொண்டு அந்த பிராம்மணர் தன்னுடைய இஷ்டமித்ர பந்துக்களுடன் வந்து ஸ்ரீ லோககுருவை நமஸ்கரித்து நின்றார். விதிப்படி உபநயனம் முகூர்த்தம் செவ்வனே நடந்தேறியது. நான்கு நாளும் யதோக்தமாக ஹோமங்களும் நடைபெற்றன. ஸ்தம்ப பூஜை முடிந்ததும், ஸ்ரீ ஸ்வாமிகள் அந்தப் பையனை கிட்ட அழைத்து கிருபாகடாக்ஷத்தால் பார்த்து "குழந்தாய் நீ பாக்யசாலி. தீர்க்காயுஸ்ஸுடனும், மகா மேதாவியாகவும், அபரிமிதமான கீர்த்தியுடனும் இந்நாட்டிற்கு திலகமாக விளங்குவாய்" என்று பரிபூர்ணமாக ஆசீர்வதித்தார்கள். இத்தகைய மஹான்களின் அனுக்ரஹ வாக்கானது இறைவனுடைய வாக்கேயன்றி வேறில்லை. இந்தக் குழந்தை பின்னர் ஓர் மஹா பண்டிதராக விளங்கினர். இப்பாரத நாட்டுச் சுடர் மணியாய் கைத் தொழில் நிபுணராய், பரிபூர்ண ஆயுஸ்ஸோடு, நமது மத்தியில் இன்றும் திடசரீரத்துடன் வஸித்துக் கொண்டிருக்கும், Sir M. விசுவேச்வரய்யா CIE அவர்களுக்கும் திருவானைக்காவல் மடத்திலேயே உபநயனம் நடைபெற்றதாக கேள்வியுற்றுள்ளேன்.

பின்னர் ராமேச்வரம் புறப்பட ஸன்னத்தமாக ஸகல ஏற்பாடுகளையும் செய்தார்கள். அப்பொழுது தான் புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் ஸ்ரீ ராமச்சந்திர மகாராஜா அவர்கள் ஸ்வாமிகளை புதுக்கோட்டைக்கு விஜயம் செய்வேண்டுமென்று கோரி தன் உத்யோகஸ்தர்களை நேரில் அனுப்பியிருந்தார்கள். தொண்டைமான் மன்னர்களிடமும் புதுக்கோட்டை

Koviloor Digital Library

ஸமஸ்தானம் மக்களிடம் தனியாக ஓர் அன்பு ஸ்ரீ காம கோடி பீடாதிபதிகளுக்குண்டு. ஏன்? 1691 A. D. ஆண்டில் விஜயரகுனாத தொண்டைமான் மன்னர், அக்காலத்திய பீடாதிபதியும் பகவன்னுமாவை ஸித் தாந்தம் செய்தவருமான 59வது ஜகத்குரு ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு தாமரப்பட்டயம் சாஸனம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்பால் ஸ்ரீ ஸதா சிவப்ரம்மேந்திராளுடைய உபதேசங்களின்படி பலவித தர்மங்களை உலகத்தில் வேறு எங்கும் இல்லாத படி நடத்தியிருக்கிறார்கள். 60, 61, 62வது பீடாதிபதி களும் ஸமஸ்தானத்திற்கு விஜயம் செய்து அனுக்ரஹம் செய்திருக்கிறார்கள். 1846ம் வருஷத்தில் நடந்த தாடங்கப்ரதிஷ்டையின்போது தொண்டைமான் மன் னர் வெகுவாக பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார். இந்த எல்லா விஷயங்களையுமறிந்த மகாராஜாவின் கோரிக் கைபடி ஸ்வாமிகள் புதுக்கோட்டைக்கு புறப்பட் டார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடைய விஜயம் மக்களுக்குத் தெரிந்ததும் ஆங்காங்குள்ள ஜனங்கள் ரஸ்தாக்களை செப்பனிட்டும் மகர தோரணங்களால் அலங்கரித்தும் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு இடத்திலும் ஆண் பெண் குழந்தைகளுடன்கூடி லோககுருவை வரவேற்றி பணிந்து பலவித காணிக்கைகளையும் அர்ப்பித்து ஸ்வா மிகள் பல்லக்கின் கூடவே பின்துடர்ந்து வந்தார்கள். அரசன் எவ்வழியோ அவ்வழியே பிரஜைகளும் பின் பற்றுவார்கள் என்ற ஆன்றோர் மொழிக்கோர் சான் றாகும். மகாராஜா அவர்கள் நகர எல்லையில், யானைகள் குதிரைகள் பட்டாளங்கள் துருப்புகளுடனும், தலைமை உத்யோகஸ்தர்கள் திவான் முதலியவர்களுடனும் புடைசூழ் அநேக வாத்யங்கள் முழங்க, தானுதிகாரி யின் தலைமையில் நூற்றுக் கணக்காக வைதீர்கள் வேதங்களை கோஷிக்க, மகாராஜா எதிர்கொண்டு வர வேற்று, பூர்ணகும்பங்களைக் கொடுத்து பட்டத்து யானையின்மேல் நன்கு ஜோடித்த தங்க அம்பாரியில் ஸ்ரீ லோககுருவை வீற்றிருக்கச் செய்து, வெண்குடை பிடித்தும் சவுரி சாமரங்களை வீசியும் ஆலவட்டங்களும் நன்கு அலங்கரிக்கப்பட்ட ராஜ வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துவர ஆங்காங்கு கணக்கற்ற மக்கள் கர்ப்பூர ஹாரத்திகளையும் காட்டி தங்களுடைய எல்லை இல்லாத பக்தி பரவசத்தை வெளிப்படுத்தி, நகரமத்தியுள்ள அரண்மனையில் பூஜா கிருஹத்திற்கு

Koviloor Digital Library

முன்னுள்ள கல்யாண விலாஸத்தில் எழுந்தருளச் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் விஜயத்தை முன்னிட்டு ஸமஸ்தானத்தில் உள்ள ஆலயங்களிலும் விசேஷ பூஜைகள் நடந்தன. ஜாதிமதம் வித்யாஸமில்லாமல் எங்கும் ஏழைகளுக்கு திருப்தியாய் அன்னம் போடப் பட்டது. ஸமஸ்தானத்தில் அன்றுமுதல் சில மாதங்கள் வரை பெரும் திருவிழாவாகத்தானிருந்தது. மகாராஜா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ ஸ்வாமிகளும் சாதுர்மாஸ்ய வ்ரதத்தை புதுக்கோட்டையிலேயே நடத்தினார்கள். ஸமஸ்தானத்தில் பிரஸித்தி பெற்றதும் வெகு புராதனமான க்ஷேத்ரங்களாகிய, திருக்கோகர்ணம், திருஅரண்குளம், திருமணஞ்சேரி, குடுமியாமலை, விராலிமலை, நார்த்தமலை, திருக்களம்பூர், திருமயம் ஆலயங்களில் சிவ விஷ்ணு மூர்த்திகளை தர்சனம் செய்தார்கள். அநேக ஸங்கீத வித்வான்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் முன் காலக்ஷேபங்களைச் செய்தார்கள். மகா வித்வான்களான: பாடகம் கோபாலய்யர் ஸ்வரகத் கிருஷ்ணய்யர், பிடில் கிருஷ்ணன், டோலக் நன்னிமியா சோடிம்யா முதலானவர்களுடைய திறமையை ஸ்வாமிகள் புகழ்ந்து அவரவர்களுக்கு ஸன்மானங்களையும் செய்தார்கள். வித்வத் ஸபைகள் நடந்து பலவிதமான சாஸ்திரங்களில் பிரக்யாதி பெற்றவர்கள் தர்ம ஸூக்ஷ்மங்களை விசாரித்து நிர்ணயங்களைச் செய்தார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்ட்ரம் முதலிய பல பாஷைகளில் புலமை பெற்ற பலர் தாங்கள் இயற்றிய நூல்களையும் ஸாகித்யங்களையும் ஸ்வாமிகள் முன்பாக அரங்கேற்றி ஆசி பெற்றார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில்தான் தமிழில் பெரிய புராண கீர்த்தனங்களை இயற்றிய மழவை சின்னசாமி பாரதி "லோக குருவே சங்கரநாம தருவே" என்ற கீர்த்தனத்தைப் பாடி ஸ்வாமிகளிடம் வெகுமதி பெற்றார். சேந்தமங்கலம் பாரதியார் கபில நாடகத்தை இயற்றி அரங்கேற்றினார். இன்னும் பல பாடகர்கள் இவர்களைப்பற்றிய பாடல்களையும் கீர்த்தனங்களையும், பெரியோர்கள் பாடிவருவதை கேட்கலாம். ஸமஸ்கிருதத்தில் "குருவரமாச்ரயத்" என்ற மோஹன கீர்த்தனமும் "குருசரணாரவிந்தமே" என்ற காம்போதி தெலுங்கு கீர்த்தனமும் பிரஸித்தம். சிலர் சதாசிவ ப்ரம்மேந்திர கிருதிகளை பாடும்பொழுது

Koviloor Digital Library

பாடல்களுக்கு அந்த கிருதிகளின் பெருமையை எடுத்துக் கூறியும், சப்த ஞானத்துடனும் அர்த்த ஞானத்துடனும், எந்தந்த ராகங்களில் கிருதிகள் அமைக்கப்பட்டனவோ அவைகளை மாற்றாமலும், நிம்மதியாகவும், பக்தியோடும், சுத்தமாகவும் பாடவேண்டுமென்று ஸ்வாமிகள் உபதேசித்ததாக என் தகப்பனார் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஸமஸ்தானத்தில் மிக பிரஸித்தி பெற்றும் மகா மேதாவியும் மஹா சீலரும், ஆத்திச் சூடி கொன்றை வேந்தன் முதலியவைகளை வடமொழியில் மொழி பெயர்த்தவரும் அடியேனுக்கு வித்யா குருவுமான ஸ்ரீ ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் கூறின ஒரு சுலோகம் ஞாபகத்திற்கு வருகிறது.

"विभ्राजद्भवदीयमङ्गलतनोस्सन्दर्शनेनाधुना

सर्वे नन्यरसालराज्यनिलयाः संप्राप्तभाग्योदयाः ॥

"மகா மேதாவியும், தெய்வத்தன்மை நிறைந்தவும், மங்களகரமான திருமேனியுமுள்ள தங்களைப் பார்த்த மாத்திரமே, இந்நாட்டு மக்கள் அனைவரும் பாக்யத்தையும் ஜன்ம லாபத்தையும் பெற்றவர்களாகிறோம்" என்று வர்ணித்தார். காலஞ்சென்ற திவான் ரீஜண்ட் A. சேஷய்ய சாஸ்திரிகளால் நன்கு மதிக்கப்பட்டு Poet Laurette என்ற பிருது பெற்ற தமிழ் புலவர் ஸ்ரீமான் உலகநாத பிள்ளை லோக குருவைப் பின்வருமாறு பல பாடல்களை இயற்றி வணங்கியிருக்கிறார்கள்.

"பக்குவர்க்கே யுபதேசம் பண்ணுவர்
குருக்கள் எல்லாம் தங்கள்
பக்குவத்திற் கேற்றவா றுபதேசம்
பண்ணுதலா லிவரைப் பல்லோர்
தக்கவரும் லோககுரு வென்றனர்
முன்னின்ற பொருள்படிகம் தன்னுள்
ஒக்கவா றிலகுதலாற் படிகமனப்
பரனிவனே உவமையில் லான்"

"வறியாற்கொன் றீவதே யீகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத் தொன்றணிந் தானும்
பூசனையு ஞானமில்லா புல்லறிவோர்க் கும்மருளிப்
பூசனைகொண் டானுலகிற் போந்து"

"ஞானகுரு ஷண்மதஸ்தா பனகுரு ஞாலகுரு
வானகுரு புருஷார்த்தங் கள்நான்கும் வழங்குகுரு
மானகுரு மஹத்தானகுரு தந்த்ரகுரு மந்த்ரகுரு
கானகுரு அத்து விதகுரு சங்கரகுருவே"

Koviloor Digital Library

இன்னும் இப்பெரியாரைப் போற்றி வடமொழி தென் மொழிகளிலும் தெலுங்கு கன்னட பாஷைகளி லும் வல்லுனர்களான பலர் அநேக கீர்த்தனங்களையும் இயற்றிப் பாடியிருக்கிறார்கள். இப்படி பலவிதங்களி லும் பல லக்ஷக்கணக்கான மக்களும் மன்னரும் போற் றிய பிறகு சாதுர்மாஸ்ய விரதத்தையும் முடித்துக் கொண்டு விசுவரூப யாத்திரையாக புறப்படுமுன் ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமான் மன்னர் கனகாபிஷே கத்தைச் செய்தார். புதுக்கோட்டையை விட்டு நமன ஸமுத்திரம் விஜயம் செய்து அங்குள்ள ச்ரோத்ரிய மகாஜனங்களால் பூஜிக்கப்பட்டு திருமெய்யம் வந்த தும் நகரத்தார்கள் ஒன்றுகூடி கணக்கற்ற காணிக்கை களையும் பூஜைகளையும் செய்து அங்கிருந்து மார்க்கங் களில் மக்கள் ஆரவாரம் செய்து கூடவே பின்தொடர கோயிலூர் வந்தார்கள். வியாகரண சாஸ்திர மேதாவி யான சங்கர சாஸ்திரிகளை முன்னிட்டுக்கொண்டு கோயிலூர் அத்துவித மடத்தின் அதிபர்கள் பாத பூஜைகளைச் செய்து வணங்கவும் அப்பால் மதுரைமா நகரம் சென்று மீனாக்ஷி ஸுந்தரேச்வரனைத் தரிசித்து சிஷ்யர்களால் பூஜிக்கப்பட்டு ராமனாதபுரம் விஜயம் செய்தார்கள். ஸ்ரீ முத்து ராமலிங்க ஸேதுபதி மகா ராஜா அவர்கள் அபார பக்தியுடன் சகல மரியாதை களுடன் வணங்கி வரவேற்று பிக்ஷைகளை நடத்தி கூடவே ஸ்ரீ ஸ்வாமிகளுடன், பின் துடர்ந்து ராமேஸ் வர யாத்திரையை சிறப்பிக்கச் செய்தார். ஸ்ரீ காம கோடி பீடாதிபதிகளுக்கும் ஸேதுபதி குலத்தவருக்கும் 400 வருஷங்களாகவே ஸம்மந்தமுண்டு. 54 வது பீடாதிபதியான ஸர்வக்ஞ ஸதா சிவ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ப்ரவீர ஸேதுபதிக்கு ஸகல வேதாந்த ரஹஸ்யங்களையும் திரட்டி ஸ்வாத்ம நிரூ பணம் என்ற நூலை இயற்றி உபதேசித்திருக்கிறார்கள். இந்த ஸ்வாமிகளுக்கு ஸர்வ மானியமாக புலவசேரி என்ற கிராமம் விடப்பட்டு இன்னும் ஸ்ரீ மடத்தின் அனுபவத்திலிருக்கிறது.

சிவபுராணம் கேட்பதில் ஆர்வம்

தக்கவர்களைக் கொண்டு சிவபுராணம் சொல்லக் கேட்பதில் ஸ்வாமிகளுக்கு மிகவும் ஆற்றல் உண்டு. அக்காலத்தில் தஞ்சை ஜில்லா ரிஷிவந்தியம் என்னும்

Koviloor Digital Library

கிராமத்தில் வெங்கடராமய்யர் என்னும் பெயருடன் ஓர் அந்தணர் இருந்தார்; அவர்கள் நன்கு கற்றவர். பழுத்த சிவபக்தர். அத்துடன் அவர், ஓர் மிராசுதாராகவும், கிராமக் கணக்கராகவும் இருந்து வந்தார். தனக்கு ஓய்வு நேரம் கிடைத்த பொழுதெல்லாம் அவர் அன்பர்களுக்கு சிவபுராணப் பிரவசனம் செய்து வருவார். உள்ளன்புடன் செய்யும் அந்தப் பிரசங்கத்தைக் கேட்க அந்நாளில் அவரது இல்லத்தில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் கூடுவர். ஸ்வாமிகள் அவரது பிரசங்கத்தைக் கேட்க ஆவல் கொண்டு அவரை கும்பகோணம் மடத்தில் சில நாட்கள் தங்கியிருக்கச் செய்து சிவ ரஹஸ்யத்தை பிரசங்கம் புரிய வேண்டுமென்று ஆக்ஞை யிட்டிருந்தார்கள். அதன்படி வெங்கடராமய்யரும் மடத்தில் தங்கி சிவ ரஹஸ்ய புராணத்தை உபன்யசித்து வந்தார். ஒவ்வொரு நாளும் ஸ்வாமிகள் நேரில் வந்து அமர்ந்து இந்த உபன்யாஸத்தைக் கேட்டு வந்தார்கள். அந்த வெங்கட்ராமய்யர் புதல்வரே கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் கணித பேராசிரியராக விளங்கிய யூக்ளிட் ஸ்ரீனிவாஸய்யர் என்று அழைக்கப் பெற்ற திவான் பகதூர் R. V. ஸ்ரீனிவாஸய்யர் C.I.E., பின்னர் இவர் அக்காலத்தில் அரசாங்கத்தில் ஓர் பெரிய பதவியாகிய Inspector General of Registration என்னும் உத்யோகத்தை வகித்து வந்தார். அவர் புதல்வர் R. S. சங்கர அய்யர் என்பார் ஜில்லா ஜட்ஜாக வேலை பார்த்து தற்காலம் கோயம்புத்தூரில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தக் குடும்பம் பரம்பரையாக மடத்தின் சிஷ்யர்களாக உள்ளது.

ஸ்வாமிகளின் சிவபூஜையின் பெருமை

ஸ்ரீ ஸ்வாமிகள் அக்காலத்தில் செய்துவந்த சிவ பூஜையின் பெருமைக் குறித்து நேரில் கண்டவர்கள் கூறியதை இவ்விடம் வெளியிட விரும்புகிறேன். மடத்தின் ஆஸ்தான தெய்வமாக விளங்கும் ஸ்ரீ சந்திர மௌளீச்வர ஸ்படிகலிங்கத்திற்கு (யோகலிங்கம்) ஸ்வாமிகள் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளைகளிலும் பல மணி நேரம் மெய்மறந்து அர்ச்சனை செய்வார்கள். பில்வ தளங்களால் அர்ச்சனை செய்யும்பொழுது மூன்றுக்குக் குறைவாக உள்ள தளங்கள் ஸ்வாமிகளது

Koviloor Digital Library

கரத்திலிருந்து நழுவி கீழே விழுந்துவிடுவது வழக்க மாம். மேலும் சிவபூஜா விதிகளில் கூறியுள்ளபடி எந்த காலத்தில் எந்த பொருளை நிவேதனம் செய்ய வேண்டுமோ, எதை அபிஷேகம் செய்ய வேண்டுமோ எந்த புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சனை செய்ய வேண் டுமோ இவைகளை எவ்வித குறைவுமின்றி செய்து வரு வார்கள். புஷ்பம் அதிகமாகக் கிடைத்த நாள்களில் மிகுந்த சந்தோஷத்துடன் ஸ்வாமிகள் பூஜை செய் வார்கள். சென்ற 1888 வது வருடத்தில் ஸ்வாமிகள் ஆந்திர தேசத்திற்கு விஜயம் செய்திருந்த பொழுது ஸ்வாமிகளது சிவபூஜையின் சிறப்பைக் கண்டு அது வரை கண்டிருாத அந்த பூஜையின் பெருமையைப்பற்றி உயர்வாக ஜனங்கள் பேசிக் கொள்வார்கள். தனுஷ் கோடியில் ஸ்ரீ லோககுரு விதிப்படி ஸ்னானங்களை முடித் துக் கொண்டு அதை விட்டு ராமேஸ்வர க்ஷேத்ரம் விஜ யம் செய்தார்கள். ஸ்ரீ ஸேதுபதி மகாராஜா அவர்கள் கோயில் மரியாதைகளுடன் வரவேற்றும் ஸ்ரீ லோக குருவின், யாத்ரைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளை யும் செய்தார்கள். ராமேச்வர மகாஜனங்களும், ஸ்ரீ ஸ்வாமிகளின் தேஜஸ்ஸையும், வைதுஷ்யத்தையும், நிகரற்ற கருணையையும் பார்த்து பரவசப்பட்டு ஏராள மான பாதபூஜைகளையும் பிக்ஷைகளையும் நடத்தினார் கள். க்ஷேத்ர ஸம்பிரதாயப்படி ஒவ்வொரு தீர்த்தத் திலும் ஸ்னானங்களைச் செய்தும் ஸ்ரீ பர்வத வர்த்தனீ ராமனாதரையும் தர்சனம் செய்த பிறகு ராமேச்வர ஸ்தலத்திலுள்ள வைதிகர்கள் வித்வான்களுக்கு அவர வர்களுக்குத் தக்கபடி ஸன்மானங்களையும் வழங்கி ஏழைகளுக்கு ஏராளமாக அன்னதானம் வஸ்த்ர தானம் செய்தார்கள். ஆந்திர சக்கரவர்த்தி ஸ்ரீ கிருஷ்ண தேவ மகாராஜாவால் போற்றி வணங்கப்பட்டவும், ராமேச் வர க்ஷேத்ரத்தில் ஸித்திபெற்ற மகாபுருஷாள் 54 வது பீடாதிபதி ஸ்ரீ ஸர்வக்ஞ ஸதா சிவபோதேந்திர ஸரஸ்வதி அதிஷ்டானத்தில் விசேஷ அபிஷேக பூஜாதிகளை நடத்தி அந்த க்ஷேத்ர மகாஜனங்களுக்கு, க்ஷேத்ரத்தின் வர லாற்றையும், ஸேது தர்சனத்தின் பலனையும் ஸதா சாரம், கர்மானுஷ்டானம், ராம நாம மகிமை, சிவ விஷ்ணு தத்வங்களின் உண்மையையும், உபதேசங்களை யும் செய்துவிட்டு. ராமேச்வரத்தை விட்டு, ராமனாத புரம், மானாமதுரை முதலிய ஊர்களுக்கு விஜயம் செய்

Koviloor Digital Library

தார்கள். ஆங்காங்கு சில நாட்கள் தங்கி, பிரசித்தி பெற்ற சிவ க்ஷேத்ரமான காளையார் கோயில் விஜயம் செய்து ஸ்வாமி தர்சனை செய்து கொண்டு அங்கு அக் காலத்தில் வியாபகரான ஆஹிதாக்னி ஸ்ரீனிவாஸ தீக்ஷதரால் பாதபூஜை செய்யப்பட்டும் சிவகங்கைக்கு விஜயம் செய்தார்கள். சிவகங்கை மகாராஜா மிகவும் பக்தியுடன் செய்த பூஜைகளை ஏற்றுக்கொண்டு அனுக்ரஹம் செய்துவிட்டு புறப்படுங்கால், பல நாட்டுக் கோட்டை நகரத்து தர்மசீலர்கள் தங்கள் ஊர்களில் விஜயம் செய்து கடாக்ஷிக்க வேண்டுமென்று கோரியதைக் கருதி மார்க்கத்தில் ஒரு நாள் இரண்டு நாள் தங்கி திருப்புத்தூருக்குப் புறப்பட்டார்கள். திருப்புத்தூர் மிகவும் புராதன காலத்து சிவக்ஷேத்ரமானபடியால் அங்கு கோயில் கொண்டிருக்கும் வன்மீகநாதனை தரிசித்தார்கள். இங்கு நாட்டுக்கோட்டை நகரத்து மகாஜனங்கள், நூற்றுக்கணக்காக ஆசாரியரைக் கண்டு வணங்கி, தாங்கள் ஒன்று சேர்ந்து புதுப்பித்துக் கட்டியிருக்கும் நித்ய கல்யாணீ ஸமேத ஸ்ரீ கைலாஸநாதராலயத்தை தர்சித்து மகா ஜனங்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். எங்கும் தர்மமும் பக்தி மார்க்கமும் பரவ வேண்டும், மக்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணத்தையே முழுதும் கொண்ட கருணை வள்ளல் ஸ்ரீ லோக குரு, ஸரி என்று அங்கீகரித்து பலதரப்பட்ட ஆயிரக் கணக்கான மக்கள் பின் துடர்ந்து வரவும், பல வாத்யங்கள் முழங்க, இளையாற்றங்குடிக்கு விஜயம் செய்து ஸ்ரீ கைலாஸநாதரின் ஆலயத்தின் தென்பால் நிர்மாணம் செய்யப்பட்ட அழகிய மண்டபத்தில் எழுந்தருளினார்கள். ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளுக்கு சில காலம் வஸித்தும் பூஜாதிகளைச் செவ்வனே நடத்தவும் வேண்டிய ஸகல வசதிகளையும் நகரத்தார்கள் மிகவும் பக்தி சிரத்தையாக முன்னமேயே ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பக்திக்கும் சிரத்தைக்கும் எடுத்துக் காட்டக் கூடியதான ஆலயமும், எதிரே தடாகமும், மண்டபங்கள் பிரகாரங்கள், நந்தவனம் கோயில் காரியாலயம், பூஜகர் மற்றும் கோயில் காரியஸ்தர்களுக்குக் கட்டப்பட்ட வாசஸ்தலங்கள், பள்ளிக்கூடம் முதலிய எல்லாவற்றையும் ஆசார்ய ஸ்வாமிகள் பார்த்து மிகவும் மகிழ்ந்து இவை

Koviloor Digital Library

யனைத்தையும் வெகு அழகாகக் கட்டி முடிக்கக் காரண மாயுள்ள யாவரையும் ஆசிர்வதித்தார்கள். இந்த கைலாஸ நாதர் ஆலயமானது மந்திர சாஸ்திர ரீதியாக கவனித்துப் பார்க்குங்கால், ஹாலாஸ்யம், திரு வானைக்கா, திரு அரன் குளம் என்று பிரசித்தமான மூன்று முக்ய கோணங்களுக்கும் நடு மய்யமாக விளங்கு கின்றது. சிவநேசச் செல்வர்கள் கருத்துடன் நோக்கு வாராகில் இங்கு ஆலயம் கொண்டருளிய ஸ்ரீ கைலாஸ நாதர் உணர்ச்சியை எழுப்பி சிவானுபவத்தையும் அருள் செய்வார் என்பது திண்ணம். சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக பல நாடுகளிலும் விஜயம் செய்து ஓயாமல் பிரதி தினம் மிகவும் நியமத்துடன், பூஜை, விரதம், தவம், பாராயணம், ஹோமம் முதலிய வைகளை நடத்திய பயனாய், இந்த ஆலயத்தின் கண்ணே தானும் இளைப்பை ஆற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆசார்ய ஸ்வாமிகள் கருதினார் போலும். ஆத்மானு பவம் நிறைந்து முகவிலாஸத்தோடு பிரகாசிக்கும் ஸ்வாமிகள் தான் இங்குதான் நிர்மாணமடையப் போவதாக முன்னமேயே நினைத்தவர்களாய், முக்ய மான ஸ்ரீ மடத்திலுள்ள காரியஸ்தர்களுக்குச் சொல்லி, பாலாற்றங்கரையில் உதயம்பாக்கத்தைச் சேர்ந்த பிரம்மசரிய விரதத்தில் ஒழுக்கத்துடன் விளங்கி வரும் ஸ்வாமிநாதன் என்ற பிரமசாரிக்கு ஸன்யாஸாச்ர மத்தை விதிப்படி அருளி மகா வாக்யங்களையும் உபதே சித்து மடத்து பூஜா விதிகளையும் ஸம்பிரதாயங்களை யும் அருளிச் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிநாதனும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி என்ற ஸன்யாஸ நாமத்துடன் சிச்ரூஷை செய்து வர மகாதேவ ஸ்வாமி கள் ஸ்ரீ சந்திரமௌளீசருடைய பூஜைகளை மிகவும் விசேஷமாகச் செய்து வந்தார். இளையாற்றங்குடி க்ஷேத்ரமானது மிகவும் சிறப்பாக பூலோக கைலாஸ மாக விளங்கிற்று. நாலா பக்கங்களிலிருந்து புலவர் களும் ஸங்கீத வித்வான்களும் தங்கள் தங்கள் ஸாகித் யங்களையும் பாட்டுக்களையும் ஆசாரியார் முன் நிவேதித் தார்கள். நகரத்தார்களுடைய விசேஷ ஏற்பாடுகள் மனதைக் கவர்ந்தன. ஏராளமாக பிராம்மண ஸந்தர்ப் பணைகள் ஏழைகளுக்கு அன்னதானங்கள் நடந்தன. இந்த க்ஷேத்ரத்தில் வந்தபொழுதுதான் ஸ்ரீ காமகோடி பீடத்தில் இதற்கு முன் பிரகாசித்து வந்த 64 ஆசாரி

Koviloor Digital Library

யர்களையும் கொண்ட குருபரம்பரா ஸ்தோத்ரத்தை இயற்றினார்கள் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். சில சமயம் பூஜைகள் முடிந்த பிறகு பக்தி மேலிட்டு பரவசத்துடன் குழுமியிருக்கும் மகா ஜனங்களிடம் கருணை கூர்ந்து, உத்ஸாகத்துடனும், உணர்ச்சியுடனும், தர்ம சாஸ்திர ரஹஸ்யங்களையும், பகவத் பக்தியின் ஸ்வரூபத்தையும், ஸமரஸ பாவத்தையும் ஸதாசாரானுஷ்டானத்தையும் விசேஷமாக உபதேசித்தருளியிருக்கிறார்கள். அத்வைதானுபவ விஷயங்களை மிகவும் ஸாமான்யர்கள் கூட எளிதில் உணரும்படியாகவும், விளக்கமாகவும், சுருக்கமாகவும், அழகாகவும் இவர்கள் பேசும் திறமையை, அக்காலத்திய பெரியார் பின்வருமாறு கூறி போற்றியிருக்கிறார்.

"சொன்மணக்கும் பொருண்மணக்கும்
சுருதிமணக்கும் வாயான் சுடர்மணக்கும்
பொன்மணக்கும் சத்வகுணமணக்கும்
மனத்தூயன் பூமணக்கும் பொற்பாற்
சென்மணக்கு கையனருட்
செயல்மணக்கும் விழியன்செந் தேன்மணக்கும்
நன்மணக்கும் நாவினன்மேல்
நாமணக்கும் கவிமணக்கும் நலம்பெற்றுய்வோம்"

இளையாற்றங்குடியில் இவ்விதம் விஜயம் செய்து வந்தபொழுது ஒரு நாள் பூஜை முடிந்த பிறகு யாவர்க்கும் மந்திராக்ஷதைகளையும் கொடுத்தும் தர்சனம் செய்ய வந்த வித்வான்களுக்கும் ஸன்மானங்களைக் கொடுத்து அனுக்ரஹம் செய்தனுப்பி விட்டு தான் ஏகாந்தமான ஸ்தலத்திலிருந்து கொண்டு ஸ்ரீ மடத்தின் காரியஸ்தர்களுக்கு சில ஹிதோபதேசங்களையும்செய்து விட்டு மிகவும் உபசாந்தர்களாய் ஓர் ஆஸனப் பலகையில் அமர்ந்து தண்டத்தையும் இடது கையில் பிடித்து சற்றுச் சாய்ந்து கொண்டவர்களாய் பரதேவதை ஸ்ரீ காமாக்ஷி விஷயமாக சில மந்திரங்களையும் ஸ்துதிகளையும் இனிய குரலில் சொல்லிக்கொண்டே தியானத்தில் ஆழ்ந்தார்கள். நான் இந்த அதிஷ்டானத்திற்கு சென்ற நந்தன வருஷம் ஆராதனைக்கு வந்தபொழுது இந்த தேவஸ்தானத்தில் பூஜகரும், ஆகம சாஸ்திர.விற்பன்னரும் சிவபெருமான் பக்தி ததும்பியவருமான ஸ்ரீ ராமஸாமி குருக்கள் என்னிடம் இந்த லோக குரு ஸ்வாமிகள் ஸித்தி அடைந்த வைபவத்தின்போது

Koviloor Digital Library

தனக்கு 14 வயது என்றும் அந்த சமயம்தான் நேரில் பார்த்ததை என்னிடம் கூறியதை அப்படியே இங்கு கூறுகிறேன்.

"வழக்கம் போல் கோயிலில் ஸாயரக்ஷை பூஜைகளை முடித்து விட்டு பெரியவாள் முன் வந்து நின்றேன். ஸ்வாமிகள் பூஜையை முடித்துக்கொண்டு மிகவும் கம்பீரமாகவும், எப்பொழுதையும்விட உத்ஸாகமாகவும் காணப்பட்டார். நான் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தேன். எனக்கனுக்ரஹம் செய்து பூர்ண பலனையும் ஸன்மானங்களையும் செய்துவிட்டு, நான் இப்பொழுது சொல்லப்போகும் வார்த்தைகளை கவனமாகக் கேட்டு அதன்படி நடக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தார்கள். "அப்பா, நான் வந்த காரியம் ஆய்விட்டது. அம்பாள் மந்தஹாஸத்துடன் இரண்டு கைகளையும் காட்டி அழைக்கிறாள்" என்று சொல்லி வரும்பொழுது திடீரென்று சற்று மௌனமாயிருந்தார்கள். அப்பால் அங்குள்ள யாவருக்கும் நல்லாசி கூறி விபூதி அக்ஷதைகளைக் கொடுத்துவிட்டு என்னைத் தனியே அழைத்து அருகிலமர வைத்து "நாளை காலை சூரியோதயத்திற்கு ஒரு நாழிக்கு முன்னமே ஸ்நாந ஸந்தியா வந்தனையை முடித்துக் கொண்டு தயாராக இருக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்து விடைகொடுத்தனுப்பினார்கள். ஸ்ரீ மடத்திலுள்ள சில காரியஸ்தர்களை அழைத்து அவர்களிடம் கன்னட பாஷையில் சில வார்த்தைகளைக் கூறிவிட்டு தான் மட்டும், தனியே ஏகாந்தமாக சாய்ந்து கொண்டு தன்னுடைய மதுரமான மெல்லிய குரலில் அம்பாள் விஷயமாக சில ச்லோகங்களைப் பாடி ரஸித்துக்கொண்டும், சில ஸமயம் எழுந்திருந்து நாலா பக்கத்திலும் பார்த்துவிட்டு மறுபடியும் முன் போலவே ஆஸனத்திலமர்ந்து, தியானத்தில் வீற்றிருந்தார்கள். அருகிலிருந்தவர்கள் பலர் ஒவ்வொருவராய்ப் போன பிறகு, நான் மட்டும் ப்ரமை தட்டினவனாக எதிரே நின்றேன். ஸ்வாமிகளும் தியானத்திலேயே இருந்தார்கள். ஒவ்வொரு ஸமயம் கண்ணைத் திறப்பதும் ஸகதம்பிகையின் நாமத்தை திருப்பி திருப்பிக் கூறிக் கொண்டுமிருந்தார்கள்.

எனக்கு மனது இருப்புக்கொள்ளாமல் அன்று ராத்திரி இரண்டு தடவை வந்து ஸ்வாமிகளை தரிசித்

Koviloor Digital Library

தேன், மேலே சொல்லிய வண்ணமே வீற்றிருந்தார்கள்.
விடிய ஒரு நாழிகை முன்னமே வழக்கம்போல் ஸ்ரீ மடத்
தில் மணி யடித்தது. நான் எனக்கிட்ட ஆக்ஞைப்படி
ஸ்நாந ஜபங்களை முடித்துக்கொண்டு பெரியவாள் முன்
னின்றேன். எழுந்திருந்து பாதுகைகளை தரித்துக்
கொண்டு கோயிலுக்கு முன்னுள்ள தடாகத்தின்
கரைக்கு வந்தார்கள். அங்கு ஓர் ஆஸனப் பலகையில்
அமர்ந்து சில நிமிஷங்கள்வரை கிழக்கு திக்கை நோக்
கிய வண்ணமாக விருந்தார். இதற்குள் பலர் ஸ்ரீமடத்
தைச் சேர்ந்தவர்களும் கோவில் ஸிப்பந்திகளும் ஊரார்
களில் சிலரும் அங்கு கூடிவிட்டார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள்
நின்று தண்டவந்தனம் செய்து "சம்போ சந்திர
மௌளே" என்று சொல்லி அப்பால் அம்பாளைப்பற்
றிய இரண்டொரு ச்லோகங்களைச் சொல்லிக்கொண்டு
தன்னுடைய கம்பீரமான தோற்றத்துடனும், மந்த
ஹாஸ முகத்துடன் பார்க்க பார்க்க காந்தியுடன் ஆஸ
னத்திலிருந்து கொண்டு நாலா பக்கங்களிலும் நின்று
பக்தர்களையும் பார்த்து வலதுகையால் எல்லாரையும்
ஸமிங்ஞை செய்துவிட்டு ஆஸனத்திலேயே உட்கார்ந்து
தியானம் செய்பவர்கள்போல் வீற்றிருந்தார்கள். சூரி
யோதயம் தெரிவதற்கு இன்னும் சில நிமிஷங்கள்தான்
இருக்கும். ஸ்வாமிகள் தியானத்திலிருந்து எழுந்
திருந்து வருவார்களென்று நாங்கள் காத்துக்கொண்
டிருந்தோம். மணி 6 ஆய் விட்டது. மறுபடியும் ஸமீ
பத்தில்போய் பார்த்தோம். எந்த நிலையில் இருக்கிறார்
கள் என்று அறியக்கூட வில்லை. அப்பால்தான் நாங்
கள் யாவரும் ஸ்ரீ லோக குரு நிர்விகல்ப ஸமாதியிலிருந்
தவர்களாய் பிரம்மபாவத்தைப் பெற்றுவிட்டார்கள்
என்று நிச்சயமாக தெரிந்து கொண்டோம்" என்று
கண்ணும் கண்ணீருமாய் மிகவும் உருக்கமாய்ச் சொன்
னார். இந்த விதம் விரோதி ஹு பங்குனிமீ 8உ அமா
வாஸ்யை (தர்ச தினத்தன்று உதயாதி பூர்வம்)
(20—3—1890) குருவாரம் ஸ்ரீ கைலாஸநாதனுடைய
ஸாக்ஷாத் ஸன்னிதியில் அகண்டாகார பிரம்ம
சைதன்யமானார்கள்; என்ற விஷயம் வாயுவேக மனோ
வேகமாக நாலாபக்கங்களிலும் பரவி, ஆயிரக்கணக்
கான ஆஸ்திகர்கள் இளையாற்றக்குடிக்கு விரைவாக
ஓடிவந்து ஒன்று கூடி சிலர் தாரைதாரையா கண்
ணீரை விட்டு அழுதார்கள். சிலர பக்தி பரவசத்துடன்

Koviloor Digital Library

அநேகம் துதிகளைப் பாடினார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அன்பர்களும் பிரமுகர்களும், பிரமித்து பக்திமேலிட்டு எங்கெங்கு தகவல் தெரிவிக்க வேண்டுமோ, அங்கெல்லாம் ஆட்களை யனுப்பி ஸமாதிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். ஸ்ரீ கைலாஸநாதர் கோயிலுக்கு வடபுறமுள்ள ஒரு விஸ்தாரமான தோட்டத்தை பிருந்தாவனமாக்கி, அங்கேயே இவர்களுடைய அதிஷ்டானத்தையும் நிர்மாணம் செய்தார்கள். ஸித்திபெற்ற நாள் முதல் 45 நாள்வரை பிரதி தினம், மகன்யாஸம், பூஜைகள் வேத பாராயணங்கள் சாஸ்திர விதிப்படி நடந்தன. மண்டலாபிஷேகத்தன்று அநேக ராஜாக்களிடமிருந்து காணிக்கைகளும், பட்டு பீதாம்பரங்கள், பூஜா திரவியங்கள் குவிந்தன. விஜய நகரம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ஸேதுபதி, கொல்லங்கோடு, கொச்சி முதலான மன்னர்களிடமிருந்து பிரதிநிதிகள் வந்திருந்து பதினாயிரக் கணக்காய் நானா ஜாதி ஜனங்களும் கலந்து தொண்டாற்றி இந்த மஹாபிஷேக காலத்தில் வந்து தரிசனம் செய்தார்கள். ஏழைகளுக்கு கணக்கில்லாமல் அன்ன வஸ்திரங்கள் வழங்கப்பட்டன. அன்று பல ஊர்களிலிருந்து வந்த பண்டிதர்கள், வைதிகர்கள், ஸங்கீத வித்வான்கள் யாவரும் பக்தி பரவசத்துடன் போற்றி வணங்கினார்கள். ஸங்கீத காலக்ஷேபங்கள் நடைபெற்றன. காரைக்குடி அஷ்டாவதானம் பாலுவய்யர், மழவை சின்னசாமி பாரதி முதலியோரும் ஸ்ரீ ஸ்வாமிகளைப்பற்றி தாங்கள் இயற்றிய பாடல்களைப் பாடினார்கள். இந்த அதிஷ்டானத்தில் நகரத்தார்கள் ஓர் அழகிய ஆலயத்தையும் கட்டியிருக்கிறார்கள். இந்த ஆலயத்தில் ஆதி சங்கர பகவத் பாதாசாரியருடைய விக்ரஹமும் பிரதிஷ்டைச் செய்யப்பட்டிருக்கிறது. அன்றுமுதல் இந்த 72 ஆண்டுகளாக இந்த அதிஷ்டானத்தில் விதிப்படி வைதிக ஸம்பிரதாயத்தை அனுசரித்து பிரதிதின பூஜையும் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் அமாவாசையன்று இப்பெரியாரின் குரு பூஜை நன்னாளில் ஆஸ்திகர்கள் ஏராளமாகக்கூடி இந்த ஆராதனையையும் விசேஷமாகக் கொண்டாடி வருகிறார்கள். இந்த ஆராதனையை ஸ்வாமிகளின் பூர்வ ஆச்ரமத்தின் வமிசத்தைச் சார்ந்தவரும் திருமயத்திற்கடுத்த கடியாபட்டியில் எலக்ட்ரிக் சப்ளை

Koviloor Digital Library

கார்ப்பரேஷனில் மானேஜராக இருந்தவருமான எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் சென்ற முப்பது ஆண்டு களுக்குமேல் தொடர்ந்தாற்போல் கர்த்தாவாக இருந்து நடத்தி வருகிறார்.

ஸ்வாமிகள் ஸமாதி அடையும் முன்னர் நடைபெற்ற சில ஆச்சரியமான நிகழ்ச்சிகள்

ஸ்ரீ ஸ்வாமிகள் ஸமாதி அடைவதற்கு நான்கு நாட் களுக்கு முன்னர் ஒருநாள் மாலை வேளையில் கால்நடை யாக இளையாத்தக் குடியிலுள்ள தோப்புகளையும் குளங் களையும் சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். அப் பொழுது ஸ்வாமிகள் ஓர் இடத்தில் நின்று தமது முன் காணப்பட்ட முட்புதர்கள் அடர்ந்த ஓர் தலத்தைக் குறிப்பிட்டு அந்தத் தலத்தைத் தமக்குக் கொடுப்பீர் களா எனக் கேட்க பின்தொடர்ந்து வந்த தேவஸ் தானத்தின் ட்ரஸ்டியான செட்டியார் அக்கேள்வியின் பொருள் விளங்காதவராகி அதைவிட ஓர் நல்ல இடத்தை சிவாலயத்திற்கு அருகிலேயே கொடுப்ப தாகக் கூறினார். ஸ்வாமிகளோ தமக்கு இதே இடந் தான் தேவையென பன்முறை வற்புறுத்தினார்கள். ஸ்வாமிகளின் மனதில் உள்ள எண்ணத்தை அறிய முடியாமலிருந்தாலும் செட்டியார் அவ்விதமே தருவ தாக அப்பொழுது ஒப்புக்கொண்டார். அன்றைக்கு மறுநாள் ஸ்வாமிகளின் உடல்நலன் சிறிது குறைவு பட்டது. மூன்றுவதுநாள் ஸ்வாமிகள் பிரும்ம சைதன்ய ஸ்வருபத்தை அடைந்து விட்டார்கள். ஸ்வாமிகள் குறிப்பிட்ட அதே இடத்தில்தான் அவர் களது பூதவுடலை நிர்விகல்ப சமாதியில் வைத்து அதன் மேல் ஓர் சிவாலயத்தையும் எழுப்பியுள்ளார்கள். இளையாற்றக்குடியிலேயே இளைப்பாற எண்ணி அவ் விடமே ஸ்வாமிகள் சித்தி பெற்றுர்கள் போலும்.

இளையாற்றக்குடியில் ஸ்வாமிகள் தங்கியிருந்த விடுதிக்கு முன் ஓர் பில்வமரம் இருந்தது. அந்த மரம் எக்காலத்திலும் நல்ல தளிர்விட்டு பசுமையாக விளங் கும். அந்த மரத்தின் பில்வத்தை யெடுத்தே ஸ்வா மிகள் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்வது வழக்கம். ஸ்வாமிகள் சித்தியடைந்த அமாவாஸைக்கு முதல்நாள் பிரதோஷம் வந்தபடியால் அன்று மாலை நடைபெற்ற

Koviloor Digital Library

விசேஷ பூஜைக்கு அம்மரத்தின் பில்வ தளங்களைக் கொண்டுவரச் செய்து என்றிலும் அதிக உத்ஸாகமாக பூஜையை செய்து கொண்டிருந்தார்கள். பூஜை முடிவு பெற்றவுடன் இனி இந்த பில்வ தளத்தினால் பூஜை செய்யக்கூடிய பாக்கியம் தமக்குக் கிடைக்கப் போவதில்லை. இதுவரை இவ்வளவு உயர்வான பில்வதளம் தமது பூஜைக்குக் கிடைத்ததும் இல்லையெனக் கூறினார்களாம். அதுவே ஸ்வாமிகள் செய்த கடைசி பூஜையாகும். இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற தற்கால ஆசாரிய ஸ்வாமிகள் அந்த பில்வ மரத்தை நேரில்கண்டு அதை பிரதக்ஷிணம் செய்து அதிலிருந்து பில்வமெடுத்து ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்திருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடைய மிகவும் புனிதமான இந்த அதிஷ்டான பூஜா விஷயங்களில் இளையாற்றங்குடி ஸ்ரீ நித்ய கல்யாணி ஸமேத கைலாயநாதஸ்வாமி தேவஸ்தானத்தைச் சார்ந்த ட்ரஸ்டிகளும், நிர்வாகிகளும், காரியஸ்தர்களும் உள்ளன்புடன் தொண்டு செய்து கவனித்து நிர்வகித்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வண்ணம், "கல்லாலின் கீழிருந்த செக்கற் மேனிக் கற்பகமரம்" சிவபெருமான், மானிட வடிவத்துடன் தோன்றி கலியின் கொடுமையைப் போக்க, மக்கள் வேற்றுமையொழிந்து பேரின்பமடைய சாதனமான ஷண்மதஸ்தாபனம் செய்து தன் ஸாக்ஷாத் ஸர்வக்ஞாதிஷ்டான ஸ்ரீ காமகோடி பீடத்தில் ஆஸ்திக மக்களுக்கு ஸான்னித்யத்துடன் அனுக்ரஹித்து வருகிறார் என்பதை யாவருமுணர்ந்ததே. அத்தகைய மகிமைமிக்க இப்பீடத்தில் 65 வது லோக குருவாய, ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள் 1851 முதல் 1890 முடிய 40 ஆண்டுகள் ஒவ்வொருநாளும், ஒவ்வொரு கணமும், இரவு பகலென்பதறியாமல், இளம்பிறை சூடிய இறைவனுக்கு மனோவாக்குக் காயங்களால், தன்னை முழுதும் அர்ப்பணம் செய்து, உலக மக்களின் நலன்களைக் கருதி தவம், பூஜை, விரதம், ஹோமம் முதலியவைகளை முறைப்படி அனுஷ்டித்துக் கொண்டு, ஜீவன் முக்தி நன்னிலையிலிருந்தவாறே,

Koviloor Digital Library

" வேதாந்த ஸித்தாந்த ஸமரஸ நன்னிலை
யுணர்ந்து மேன்மை சேரவ்
வேதாந்த ஸித்தாந்த ஸமரஸ நன்னிலை
நின்று விரிந்த நானு
பேதாந்தந்தனைக் கடந்து நாதாந்தனைக்
கடந்து பின்னர் மேலாம்
போதாந்தந்தனைக் கடந்துப் பரபிரம்ம
ஐக்கியத்தின் புனித மானேன் "

என்றபடி அகண்டாகார சுத்த ஸச்சிதாநந்த பிரம்ம சைதன்யமாக ஆனார்கள். ஆனாலும், "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்று பெரியோர் கூறியவாறு, தன்னடி பணியுமன்பர்கள் பிணிகளைப் போக்கி, நன்மைகளையும் வழங்கி இத்திருப்பதியின் கண் லிங்க உருவாய் விளங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ லோக குருவின் திருவடித்தாமரைகளைப் பலகாலும் தலையால் வணங்கி, நினைந்து போற்றி உருகியும், காமக் ரோதாதி கொடிய பாசங்களை அறவே நீங்கப்பெற்றும், தற்காலம், இங்கங்கும் பரவி மக்களைச் சொல்லொணுத் துயரக்கடலிலழுத்தும் போலிச் சமயங்கள், நாத்திகக் கொள்கைகள், வெளிமயக்கங்களில் சிறிதும் மயங் காமல், உறுதியுடனும், உள்ளன்புடனும், நமது முன் னோர்கள் அனுதிகாலம் தொட்டு வகுத்துக் காட்டி யுள்ள அறநெறி தெய்வ வழிபாடுகளில் நிலையாய் நின்று, நமது பாரத நாட்டிற்கெனத் தனிப் பெரும் புகழுடன் நிறைந்து பண்பின் உச்சியில் ஜோதியாய் ஒளிக்கும் அத்துவித ஸமரஸ பாவத்தைக் கடைப்பிடித்து "மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி யருளிய பெருமையை" யெண்ணி யெண்ணி, மெய்த்தொண்டாற்றி எல்லா நலங்களும் அறங்களும் நிறையப்பெற்று, இன்புருவம் கண்டு, பேரின்பமடைந்து நமது நாடும், மக்களும், வாழையடி வாழையாய் வாழ எல்லாம் வல்ல இறைவன் ஆதிகுரு முழுமுதற் கடவுள் மாதேவன் அருள் செய்வாராக,

" மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெல்லாம் பரவுக அறங்களின்ப
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கி
புல்குக உலகமெலாம் புரவலன் செங்கோல் வாழ்க "

Koviloor Digital Library

" நன்ஞானங் கனிந்தொழுகும் ஞானபூரணி வாழ்க
பன்ஞானம் பழுத்தொழுகும் லோககுரு பதம் வாழ்க
பொன்ஞானம் பொழி காமகோடி பீடம் வாழ்க
தொன்ஞானம் பெருகுரிமைத் தொண்டர்குழாம் வாழியவே."

" ஜயது ஜயது காஞ்சீ காமகோட்யாக்ய பீடி
ஜயது ஜயது லிங்கம் சந்த்ரமௌளீச ஸம்ஞம்
ஜயது ஜயது காமம்—சாரதா ஸ்ரீ மடோயம்
ஜயது ஜ்யது பூமா ஸ்ரீமகாதேவ நாமா."

" ஓம் தத் ஸத் "

கோவிலூர் ஆதீனம்
4963
R65(சங்)
கோவிலூர்-630307

Koviloor Digital Library

Koviloor Digital Library